இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

பாராளுமன்றம்

---

# 1992 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க, வான் செலவு (சிறப்பேற்பாடுகள்) சட்டம்

---

*[1992, நவெம்பர் மாதம் 06 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.**

---

*1992, நவெம்பர் மாதம் 06 ஆந் தேதி இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் வர்த்த மானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விலை: ரூபா 2.55 தபாற் செலவு: ரூபா 3.10

# 1992 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க, வான் செலவு (சிறப்பேற்பாடுகள்) சட்டம்.

[1992, நவெம்பர் மாதம் 06 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]
ச. வ.—ஓ 83/90

வான் செலவுச் சட்டத்தைத் திருத்துவதற்கும் ஹேக்கில் திருத்தப்பட்டவாறான "வார்சோ" சமவாயம் எனப்படும் சமவாயத்திற்குப் பயனளிப்பதற்கும்; வானூர்திகளில் இடவசதி ஏற்பாடு செய்யப்படுவதை ஒழுங்குபடுத்துவதற்கும், விமான நிலையங்களினதும் வானூர்திகளினதும் பாவனையாளர்களினதும் பாதுகாப்பிற்கும் பாதுகாவலருக்கும் ஏற்பாடு செய்வதற்கும் அத்துடன் அவற்றோடு தொடர்புடைய அல்லது அவற்றிற்கு இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது 1992 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க, வான் செலவு (சிறப்பேற்பாடுகள்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். **சுருக்கப்பெயர்.**

## பாகம் I

### வான் செலவுச் சட்டத்துக்கான திருத்தங்கள்

*365 ஆம் அத்தியாயத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

2. (இதனகத்துப் பின்னர் இச்சட்டத்தின் இப்பாகத்தில் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) வான் செலவுச் சட்டத்தின் 20 ஆம் பிரிவு இத்தால் நீக்கம் செய்யப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகிறது :—

"குடியியல் விமான போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகத்தின் நியமனம்.

20. (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக பின்வருவோர் நியமிக்கப்படலாம்:—

(அ) குடியியல் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகமாக இருப்பதற்கென அல்லது அவ்வாறு செயற்படுவதற்கென பெயர்குறித்த அல்லது பதவிகுறித்த ஆளொருவர்;

(ஆ) குடியியல் வான் செலவுப் பணிப்பாளர்களாக இருப்பதற்கென அல்லது அவ்வாறு செயற்படுவதற்கென பெயர்குறித்த அல்லது பதவி குறித்த ஆளொருவர் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்கள்;

(இ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளைக் கொண்டு நடாத்துவதற்கு அல்லது அவற்றிற்குப் பயனளிப்பதற்கு அவசியப்படக்கூடியவாறான அத்தகைய வேறு அலுவலர்களும் சேவையாளர்களும் அத்துடன் முகவர்களும்.

(2) குடியியல் வான்செலவுப் பணிப்பாளர் நாயகம், இச்சட்டத்தால் அவருக்கு உரித்தாக்கப்பட்டவாறான அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்டவாறான அல்லது அமைச்சரால் அவருக்குக் கையளிக்கப்படக்

கூடியவாறான அத்தகைய தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகித்தலும் நிறைவேற்றுதலும் அத்துடன் புரிதலும் வேண்டும்.

(3) குடியியல் வான்செலவுப் பணிப்பாளர் ஒவ்வொருவரும் குடியியல் வான்செலவுப் பணிப்பாளர் நாயகத்தின் பொதுப் பணிப்பிற்கும் கட்டுப்பாட்டிற்கும் அமைய இச்சட்டத்தால் அல்லது அதன்கீழ் குடியியல் வான் செலவுப் பணிப்பாளர் நாயகத்திற்கு உரித்தாக்கப்பட்டவாறான அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்டவாறான அத்தகைய தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகித்தலும் நிறைவேற்றுதலும் அத்துடன் புரிதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 21அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21அ என்னும் பிரிவு, அப்பிரிவின் (8) ஆம் (9) ஆம் உட்பிரிவுகளை நீக்கஞ்செய்து அவற்றிற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

"(8) இச்சட்டத்தின்கீழ் அமைச்சரால் குடியியல் வான் செலவுப் பணிப்பாளருக்கு உரித்தாக்கப்பட்டவையும் முகவருக்குக் கிடைக்கச் செய்யப்பட்டவையுமான அசைவுள்ளதும் அசைவற்றதுமான எல்லாச் சொத்துக்களும் 1982 சனவரி 20 ஆம் திகதியிலிருந்து அரசுக்காகவும் அதன் சார்பிலும் முகவரால் கொண்டிருக்கப்படும் ஆதனமாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் (9) ஆம் உட்பிரிவிற்கமைய எத்தன்மையதுமான ஏதேனும் முறையில் அத்தகைய ஆதனத்தைக் கையாளுதல் முகவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(9) முகவர் அரசிற்காகவும் அதன்சார்பிலும் கொண்டிருக்கும் அசைவுள்ளதும் அசைவற்றதுமான எல்லா ஆதனத்தையும் நல்ல ஒழுங்கில் பேணுதல் வேண்டும் என்பதுடன் ஏதேனும் அத்தகைய அசைவுள்ள ஆதனத்தை அமைச்சரின் அமைச்சுச் செயலாளரின் எழுத்திலான முற்சம்மதமின்றி பத்தாண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதியை விஞ்சியவொரு காலப்பகுதிக்கு அத்தகைய ஆதனத்தைக் குத்தகைக்குக் கொடுத்தல் ஆகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவு, முறையே "இரண்டாயிரம் ரூபா" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இருபத்தையாயிரம் ரூபா" என்னும் சொற்களையும் "ஓராண்டு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இரண்டு ஆண்டுகள்" என்னும் சொற்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

நிலைமாறுகால ஏற்பாடு.

5. (அ) முதன்மைச் சட்டவாக்கத்தின் ஏதேனும் ஏற்பாட்டில் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியில் "குடியியல் வான் செலவுப் பணிப்பாளர்" என்னும் சொற்கள் இடம்பெறும் இடத்தில் "குடியியல் வான்செலவுப் பணிப்பாளர் நாயகம்" என்னும் சொற்கள் பதிலீடு செய்யப்படுதல் வேண்டும்.

(ஆ) (முதன்மைச் சட்டவாக்கத்தைத் தவிர்ந்த) எழுத்திலான ஏதேனும் சட்டத்தில் அல்லது அத்தகைய எழுத்திலான சட்டத்தால் அல்லது அதன்கீழ் வழங்கப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட ஏதேனும் அறிவித்தலில், சான்றிதழில், தகவலில், படிவத்தில் அல்லது வேறு ஆவணத்தில், இச் சட்டம் தொடங்குவதற்கு முன்னர் முதன்மைச் சட்டவாக்கத்தின்கீழ் நியமிக்கப்பட்ட குடியியல் வான்செலவுப் பணிப்பாளர் எனக் கருதப்பட "குடியியல் வான் செலவுப் பணிப்பாளர்" என்னும் சொற்கள் பயன்படுத்தப்படும் இடங்களிலெல்லாம் அவற்றிற்குப் பதிலாக "குடியியல் வான்செலவுப் பணிப்பாளர் நாயகம்" என்னும் சொற்கள் பயன்படுத்தப்பட வேண்டும்.

(இ) முதன்மைச் சட்டவாக்கத்தின்கீழ் நியமிக்கப்பட்ட குடியியல் வான்செலவுப் பணிப்பாளரினால் அல்லது அவர் சார்பில் அவரது அத்தகைய தன்மையில் ஆக்கப்பட்ட, வழங்கப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்ட எத்தன்மையதுமான ஒப்பந்தம், உடன்படிக்கை ஆவணம் அல்லது சாதனம் ஒவ்வொன்றும் அத்தேதியிலிருந்தும் அத்தேதிக்குப் பின்னரும் விடயத்திற்கேற்றவாறு குடியியல் வான்செலவுப் பணிப்பாளர் நாயகத்தால் அல்லது அவர் சார்பில் ஆக்கப்பட்டதாக, வழங்கப்பட்டதாக அல்லது நிறைவேற்றப்பட்டதாக அல்லது ஆக்கப்பட்டுள்ளதாக, வழங்கப்பட்டுள்ளதாக அல்லது நிறைவேற்றப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

## பாகம் II

### விமான மார்க்கமாக வார்சோ ஹேக் சமவாயம்

ஹேக்கில் திருத்தப்பட்டவாறான வார்சோ சமவாயங்கள் இலங்கைக்கு ஏற்புடையனவாதல்.

6. (1) இச்சட்டத்திற்கான அட்டவணையில் அடங்கியுள்ள உறுப்புரைகள் (இச்சட்டத்தின் இப்பாகத்தில் "சமவாயம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "ஹேக்கில் திருத்தப்பட்டவாறான வார்சோ சமவாயம்" எனப்படும் சமவாயத்தின் ஏற்பாடுகளாக, ஊர்தி உரிமையாளர்களினதும் பிரயாணிகளினதும் ஒப்படைக்குநர்களினதும் ஒப்படை பெறுநர்களினதும் வேறு ஆட்களினதும் உரிமைகளுடனும் பொறுப்புகளுடனும் அவை தொடர்புறக்கூடிய அளவுக்கும் அத்துடன் இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகளுக்கமையவும், ஏற்றிச்செல்லும் அப்பணியைப் புரியும் வானூர்தி எந்த நாட்டினத்தைச் சேர்ந்தது என்பதனைப் பொருட்படுத்

தாமல், வானூர்தி மூலம் ஏற்றிச் செல்லப்படும் எதற்கும் சமவாயம் ஏற்புடைத்தாகின்றதோ அது தொடர்பில் இலங்கையிலுள்ள சட்டத்தின் வலுவையுடையதாதல் வேண்டும்.

(2) அமைச்சரானவர், காலத்துக்குக்காலம், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், சமவாயத்திற்கான மேல் ஒப்பந்தஞ் செய்யும் திறத்தவர்கள் யார் எந்த ஆட்புலங்கள் தொடர்பில் முறையே அவர்கள் திறத்தவர்களாயிருக்கின்றார்கள் எந்த அளவிற்கு அவர்கள் சமவாயத்திற்கான மேலதிக வரைவேட்டின் ஏற்பாடுகளைத் தமக்கு அனுகூலமாகப் பயன்படுத்திக்கொண்டுள்ளனர் என்பதனைச் சான்றுப்படுத்தலாம் என்பதுடன் ஏதேனும் அத்தகைய கட்டளையானது, அது தடுத்துறும் கட்டளையொன்றினால் மேலுறப்பட்டுள்ளவாறான அளவுக்குத் தவிர அவ்வாறு சான்றுப்படுத்தப்பட்ட கருமங்களுக்கு முடிவான சான்றாதலும் வேண்டும்.

(3) பிரயாணி ஒருவரின் இறப்பு தொடர்பில் சமவாயத்தின் 17 ஆம் உறுப்புரையால் ஊர்தியொன்றின்மீது சுமத்தப்பட்ட ஏதேனும் பொறுப்பானது, அப்போதைக்கு இலங்கையில் வலுவிலிருக்கும் ஏதேனும் சட்டத்தின்கீழ், அச்சட்டம் நியதிச் சட்டமாயிருப்பினுஞ்சரி அல்லது வேறு விதமாயிருப்பினுஞ்சரி அப்பிரயாணியின் இறப்புத் தொடர்பில் வானூர்தியின் ஏதேனும் பொறுப்பிற்கான பதிலீடாதல் வேண்டும் என்பதுடன் வான் செலவுச் சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் ஏற்பாடுகள் எந்த ஆட்களினால் அப்பொறுப்புகள் சுமத்தப்படுகின்றனவோ அந்த ஆட்கள் தொடர்பிலும் அத்துடன் அவ்விதம் சுமத்தப்பட்ட பொறுப்புகள் எந்த ஆட்களின் நன்மைக்காக வலுவுக்கிடப்படற்பாலதாகின்றனவோ அந்த ஆட்கள் தொடர்பிலும் அது வலுவுக்கிடப்படக்கூடிய முறை தொடர்பிலும் பயனுடையனவாதல் வேண்டும்.

(4) அமைச்சரானவர் நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்துடன் காலத்துக்குக்காலம், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளையின் மூலம் சமவாயத்தின் 22 ஆம் உறுப்புரையின் நோக்கங்களுக்காக அவ்வுறுப்புரையில் பிராங்குகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பணத்தொகைகளுக்குச் சமமானவையாக எடுக்கப்பட வேண்டிய அவ்வந்த தொகைகளைக் குறித்துரைக்கலாம்.

மேலதிக வரைவேட்டின் ஏற்பாடுகள் அவசியமான திரிபுடன் ஏற்புடையனவாதல்.

7. அதற்கான மேலதிக வரைவேட்டின் ஏற்பாடுகளைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளாதவரான சமவாயத்திற்கான மேல் ஒப்பந்தஞ் செய்துகொள்ளும் திறந்தவர் ஒவ்வொருவரும் அவரால் பொறுப்பேற்கப்பட்ட ஏற்றிச்செல்லல் தொடர்பிலான உரிமைக் கோரிக்கையொன்றை வலுவுக்கிடுவதற்கென சமவாயத்தின் 28 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கிணங்க இலங்கையிலுள்ள நீதிமன்றமொன்றிற் கொணரப்பட்ட ஏதேனும் வழக்கின் நோக்கத்திற்காக அந் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்திற்கு அடிபணிந்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க, ஏதேனும் அத்தகைய வழக்கு அந்நீதிமன்றத்தில் பேணவும்படலாம், அந்நோக்கத்திற்கென அரசியலமைப்பின் 136 ஆம் உறுப்புரையின்கீழ் ஆக்கப்படவுள்ள அல்லது ஆக்கப்பட்டுள்ளதாகக் கருதப்பட்ட விதிகள், அத்தகைய ஏதேனும் வழக்கு தொடங்கப்படவுள்ள அல்லது கொண்டுநடாத்தப்படவுள்ள முறைக்கு ஏற்பாடு செய்யலாம்.

சமவாயத்தின் திரிபுபடுத்துகைகள்.

8. (1) இச்சட்டத்திற்கான அட்டவணையின் ஏற்பாடுகள் பின்வரும் திரிபுபடுத்துதல்களுக்கு அமைய அதன்கண் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறு வான்மூலம் சர்வதேச ரீதியிலான ஏற்றிச் செல்லல் அல்லாத அத்தகைய வான் மூலமான ஏற்றிச் செல்லலுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்:—

(அ) அதன் 1(1) ஆம் உறுப்புரையில் "சர்வதேச" என்னும் சொல்லை விட்டுவிடுவதன் மூலமும்;

(ஆ) அதன் 1(2) ஆம், 1(3) ஆம், 28 ஆம், 34 ஆம் உறுப்புரைகளை நீக்கிவிடுவதன் மூலமும்;

(இ) அதன் II ஆம் அத்தியாயத்தையும் அதற்கான மேல்நிக வாரவேட்டையும் விட்டுவிடுவதன் மூலமும்;

(ஈ) அதன் 26(1) ஆம் உறுப்புரையில் "ஏற்றிச் செல்லல் ஆவணத்திற்கிணங்கவும்" என்னும் சொற்களை விட்டுவிடுவதன் மூலமும்;

(உ) அதன் 32 ஆம் உறுப்புரையில் "28 ஆம் உறுப்புரையின் முதலாம் பந்தியில் குறிப்பிடுசெய்யப்பட்ட நியாயாதிக்கங்களுள் ஏதேனும் ஒன்றிற்குட்பட்ட இடத்தில் நடுத்தீர்ப்பு இடம்பெறவிருக்குமாயின்" என்னும் சொற்களை விட்டுவிடுவதன் மூலமும்.

(2) வான்செலவுச் சட்டத்தின் III ஆம் பாகத்திலுள்ள எதுவும் வான் மூலமான எந்த ஏற்றிச் செல்லலுக்கு சமவாயம் ஏற்புடையதாகின்றதோ அந்த வான்மூலமான ஏற்றிச் செல்லல் தொடர்பில் ஏற்புடையதாகமாட்டாது.

## பாகம் III
## வான் போக்குவரத்து

குடியியல் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் உரிமங்கள் வழங்குதல்.

9. (1) அமைச்சரானவர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம், கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான (இதனகத்துப் பின்னர் இச்சட்டத்தின் இப்பாகத்தில் "நியமித்த தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய தேதியிலிருந்து அதற்கெனச் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மீதும் அத்துடன் விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தின் கொடுப்பனவின் மீதும் வான் செலவுச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட (இதனகத்துப்பின்னர் இச்சட்டத்தின் இப்பாகத்தில் "குடியியல் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) குடியியல் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகத்தால் அதன்பொருட்டு வழங்கப்பட்ட உரிமமொன்றின் அதிகாரத்தின்கீழ் அன்றி அல்லது அதன் நியதி நிபந்தனைகளுக்கிணங்கவன்றி வேறுவகையில் ஆளெவரும் இலங்கையில் வான் போக்குவரத்துத் தொழிலைக் கொண்டு நடாத்துதல் ஆகாது என வெளிப்படுத்தலாம்.

இச்சட்டத்தின் இப்பாகத்தில், "வான் போக்குவரத்துத் தொழில்" என்பது வானூர்தியொன்றின் தொழிற்படுத்துநர் என்ற வகையில் அல்லது முதல்வர் அல்லது முகவர் என்ற வகையில் இலங்கைக்கும் இலங்கையிலிருந்தும் விமானப்பயணங்கள் உட்பட உலகின் ஏதேனும் பாகத்தில் (இலங்கையில் பதிவு செய்யப்பட்டதாயினுஞ்சரி அல்லாததாயினுஞ்சரி) வானூர்தி மூலம் விமானப் பயணங்கள் மீது ஆட்களை அல்லது சரக்கை அல்லது தபாலை ஏற்றிச் செல்வதற்கான இடவசதி கிடைக்கச் செய்தல் என்று பொருள்படும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் எவரேனும் ஆளுக்கு, அவ்வாள் —

(அ) குடியியல் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகத்தை—

(i) தாம் வான் போக்குவரத்துத் தொழிலைக் கொண்டு நடாத்தும் ஆற்றலுடையவர் எனவும், அத்துடன் பிரயாண முகவர் ஒருவராகத் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு, 1966 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, இலங்கை சுற்றுலாப் பயணச் சபைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அப்போதைக்கு வலுவிலுள்ள உரிமத்தை அல்லது பதிவைக் கொண்டுள்ளார் எனவும்,

(ii) அவரது வளங்களும் அவரால் செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகளும், வான் போக்குவரத்துத் தொடர்பில் தொழிற் செயற்பாடுகள் எவையும் இருப்பின், அவை தொடர்பில் அவர் தற்பொழுது ஈடுபட்டிருக்கும் செயற்பாடுகள் தொடர்பிலும் அத்துடன் அவருக்கு உரிமம் வழங்கப்பட்டால் எத்தத் தொழிலின் செயற்பாடுகளில் ஈடுபடுவாரென அவர் எதிர்பார்க்கப்படக்கூடுமோ அந்தத் தொழிற் செயற்பாடுகள் தொடர்பிலும் உள்ளவரானவையும் உத்தேசிக்கப்பட்டவையுமான கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்குப் போதுமானவை எனவும்;

நிருப்திப்படுத்தினாலன்றியும்;

ஓராம் உட்பிரிவின்கீழ் உரிமமொன்று வழங்கப்படுதலாகாது.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் உரிமமொன்றுக்கு விண்ணப்பிக்கின்ற வானூர்தி இயக்குநர் ஒருவர் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் வங்கி உத்தரவாதம் கொடுக்குமாறு தேவைப்படுத்தப்படுதல் ஆகாது.

(4) இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உரிமம் எதுவும் கைமாற்றப்படற்பாலதாதல் ஆகாது என்பதுடன் இத்தடைவிதிப்புக்கு முரணாகச் செய்யப்படும் ஏதேனும் கைமாற்றம் வெற்றும் வறிதுமாதலும் வேண்டும்.

(5) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமம் ஒன்றின் கீழ் வான் போக்குவரத்துத் தொழிலைக் கொண்டு நடாத்தும் ஒவ்வோராளும் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பதிவேடுகளைப் பேணுதல் வேண்டும் என்பதுடன் இச்சட்டத்தின் இப்பாகத்தின் நோக்கங்களுக்கென கொடுத்துதவுமாறு அவர் குடியியல் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகத்தால் காலத்துக்குக்காலம் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய விவரத் திரட்டுக்களை, தகவல் அல்லது விளக்கங்களைக் கொடுத்துதவுதலும் வேண்டும்.

உரிமமொன்றை இல்லாதொழிப்பதற்கு குடியியல் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகத்திற்குள்ள தத்துவம்.

10. (1) உரிமம் வைத்திருப்பவர் —

(அ) எந்தத் தொழில் தொடர்பில் உரிமம் வழங்கப்பட்டுள்ளதோ அந்தத் தொழில் கொண்டு நடாத்தப்படுவதை இல்லாதொழித்துள்ளார் என; அல்லது

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக தவறான முறையில் உரிமத்தைப் பெற்றுள்ளார் என; அல்லது

(இ) ஒழுக்கச் சீர்கேட்டை உள்ளடக்கும் தவறொன்றுக்கு எந்தக் கம்பெனியின் பிரதான அலுவலர்கள் எவரும் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளார்களோ அந்தக் கம்பெனியொன்றென; அல்லது

(ஈ) அத்தகைய உரிமத்தை வழங்குவதற்காக 9 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் தகைமையைக் கொண்டிராதொழிந்துள்ளாரென;

(உ) இச்சட்டத்தின் இப்பாகத்தின் எவையேனும் ஏற்பாடுகளை மீறியுள்ளாரென

குடியியல் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் திருப்திப்படின் அவர், 9 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் அவரால் வழங்கப்பட்ட உரிமமொன்றைக் கட்டளையின் மூலம் இல்லாதொழிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான கட்டளையெதுவும்; ஏன் அத்தகைய கட்டளை ஆக்கப்படக்கூடாதென அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குள் காரணம் காட்டுமாறு அறிவித்தல் கொடுத்தபின்னரன்றி ஆளொருவருக்கெதிராக செய்யப்படுதலாகாது.

(3) எந்த ஆளுக்கெதிராக (1)ஆம் உட்பிரிவின்கீழ் கட்டளையொன்று ஆக்கப்படுகின்றதோ அந்த ஆளெவரும், அத்தகைய கட்டளை, குடியியல் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகத்தால் அந்த ஆளுக்குத் தெரிவிக்கப்பட்ட தேதியின் பின்னர் பத்து நாட்கள் முடிவடைவதற்குமுன் செயலாளருக்கு எழுத்திலான மேன்முறையீடொன்றை முன்வைக்கலாம் என்பதுடன் அத்தகைய செயலாளர் இவ்வுட்பிரிவின் கீழ் அவருக்கு முன்வைக்கப்பட்ட ஏதேனும் மேன்முறையீட்டைக் கையாளுகையில், எந்தக் கட்டளைக்கெதிராக மேன்முறையீடு முன்வைக்கப்பட்டுள்ளதோ அந்தக் கட்டளையை உறுதிப்படுத்தலாம், வேறுபடுத்தலாம் அல்லது இல்லாதாக்கலாம்.

(4) ஆளொருவருக்கு வழங்கப்பட்ட உரிமமொன்றை இல்லாதொழித்து (1) ஆம் உட்பிரிவின்கீழான கட்டளையொன்று அவ்வாளுக்கு குடியியல் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகத்தால் தெரிவிக்கப்பட்ட தேதியன்று அத்தகைய கட்டளை வலுவுக்கு வருதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய கட்டளைக்கெதிராகச் செயலாளருக்கு மேன்முறையீடொன்று முன்வைக்கப்பட்டுள்ளது எவ்வாறிருப்பினும் தொடர்ந்து நடைமுறையிலிருத்தல் வேண்டும்.

(5) செயலாளருக்கு (3) ஆம் உட்பிரிவின்கீழ் மேன்முறையீடொன்று முன்வைக்கப்படுவதன்மேல் செயலாளரின் முடிவு இறுதியானதும் முடிவானதும் ஆதல் வேண்டும் என்பதுடன் அது ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது நியாய சபையில் கேள்விக்குட்படுத்தப்படுதலுமாகாது.

வளவுகளுள் நுழைந்து சோதனை செய்வதற்கான தத்துவம்.

11. (1) குடியியல் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் அல்லது அவரால் அவரது கைப்பட எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் –

(அ) இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகள் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் இணங்கியொழுகப்படுகின்றனவா என்பதனை ஆய்ந்தறியும் நோக்கத்திற்கென 9 ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றின் அதிகாரத்தின்கீழ் வான் போக்குவரத்துத் தொழில் கொண்டு நடாத்தப்படும் வளவுகளுள் பகலில் அல்லது இரவில் நியாயமான எல்லா நேரங்களிலும் உட்பிரவேசித்து சோதனை செய்யலாம்;

(ஆ) அத்தகைய தொழில் தொடர்பில் வைத்திருக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தின் இவ்வாசகத்தினால் அல்லது அதன்கீழ் தேவைப்படுத்தப்பட்ட எவையேனும் பதிவேடுகளையும் அல்லது விவரத்திரட்டுக்களையும் அத்தகைய தொழில் தொடர்பிலான வேறு எவையேனும் பதிவேடுகளையும் சோதனை செய்யலாம் அத்துடன் அவற்றின் பிரதிகளை எடுக்கலாம்.

(2) இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகள் அல்லது அதன் கீழாக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மீறப்பட்டுள்ளன என குடியியல் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருக்கின்றவிடத்து, அவர், நீதிவானின் கைப்பட்ட ஆணைப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அத்தகைய ஆணைப்பத்திரத்தில் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் வளவுக்குள் நுழைந்து அவற்றைப் பார்வையிடலாம் என்பதுடன் இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் புரியப்படுதல் தொடர்பாகப் பயன்படுத்தப்பட்ட எவையேனும் நுழைவுச்சீட்டுக் கையிருப்புகளை அல்லது வேறு ஆவணங்களை கட்டுக்காப்பில் எடுக்கலாம்.

தவறுகளும் தண்டங்களும்.

12. (1) (அ) 9 ஆம் பிரிவுக்கு முரணாக வான் போக்குவரத்துத் தொழிலைக் கொண்டுநடாத்துகின்ற;

(ஆ) குடியியல் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள், அத்தகைய

பணிப்பாளர் நாயகத்தால் அல்லது அத்தகைய ஆளினால் 11 ஆம் பிரிவால் அவருக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்கள் பிரயோகிக்கப்படுகையில் அவரைத் தடுக்கின்ற அல்லது தடைசெய்கின்ற;

(இ) அவர் 9(5) ஆம் பிரிவின்கீழ் பேண வேண்டுமென்று தேவைப்படுத்தப்பட்டவாறான அத்தகைய எவையேனும் பதிவேடுகளைப் பேணத் தவறுகின்ற;

(ஈ) அவர் 9(5) ஆம் பிரிவின்கீழ் பேண வேண்டுமென்று தேவைப்படுத்தப்பட்டவாறான அத்தகைய விவரத்திரட்டை, தகவலை அல்லது விளக்கத்தைக் கொடுத்துதவத் தவறுகின்ற;

(உ) எவையேனும் அத்தகைய பதிவேட்டில், விவரத்திரட்டில் தகவலில் அல்லது விளக்கத்தில் அறிந்திருந்தும் ஏதேனும் பொய்யான அல்லது பிழையான கூற்றைச் செய்கின்ற;

(ஊ) இச்சட்டத்தின் இப்பாகத்தின் வேறு ஏதேனும் ஏற்பாட்டுடன் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற.

ஆளெவரும் இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் ஆட்கள் குழுவொன்றினால் தவறொன்று புரியப்படுமிடத்து, அப்பொழுது —

(அ) அந்த ஆட்கள் குழு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்று எனில், தவறு புரியப்பட்ட நேரத்தில் கூட்டிணைக்கப்பட்ட அக்குழுவின் பணிப்பாளர் ஒருவராக, பொதுமுகாமையாளராக, செயலாளராக அல்லது இதனையொத்த வேறு அலுவலராக இருந்த ஒவ்வோராளும்; அல்லது

(ஆ) அந்த ஆட்கள் குழு குழுமமொன்று எனில், தவறுபுரியப்பட்ட நேரத்தில் அக்குழுமத்தில் பங்காளர் ஒருவராக இருந்த ஒவ்வோராளும்

தமது அறிவுக்கு எட்டாமலேயே அல்லது தமது மறைமுக ஆதரவு இல்லாமலேயே புரியப்பட்டது எனவும் அவரது பணிகளின் இயல்பை கருத்திற்கொண்டும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்கு அவர் புரிந்திருக்க வேண்டியதான அத்தகைய எல்லா விழிப்புக் கவனத்தைப் பிரயோகித்தார் எனவும் எண்பித்தாலன்றி அத்தவறுக்கு அவர் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியான ஒவ்வோராளும் நீதிவானொருவர் முன்னிலையில் சுருக்க முறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது ஓராண்டை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

(4) ஒன்பதாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றின் அதிகாரத்தின்கீழ் வான் போக்குவரத்துத் தொழிலைக் கொண்டுநடாத்தும் எவரேனும் ஆள், இச்சட்டத்தின் இவ்வாசகத்தின் கீழ் ஏதேனும் தவறுக்கு தகுதிவாய்ந்த நியாயாதிக்கம் கொண்ட நீதிமன்றமொன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டு அத்தகைய குற்றத்தீர்ப்பிற்கெதிராக மேன்முறையீடெதுவும் முன்வைக்கப்படாதவிடத்து அல்லது மேன்முறையீட்டில் குற்றத் தீர்ப்பு உறுதிப்படுத்தப்படுமிடத்து குடியியல் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் அறிவித்தலின்றி அத்தகைய உரிமத்தை இல்லாதொழிக்கலாம்; அத்துடன் இவ்வுட்பிரிவின்கீழ் அவரது முடிவே இறுதியானதும் முடிவானதுமாதல் வேண்டும் என்பதுடன் ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது நியாயசபையில் கேள்விக்குட்படுத்தப்படுதலும் ஆகாது.

ஒழுங்கு விதிகள்.

13. (1) அமைச்சரானவர் சுற்றுலாப் பயணத்துறை என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் ஆலோசனையுடன் இச்சட்டத்தின் இப்பாகத்தின் கோட்பாடுகளையும் ஏற்பாடுகளையும் நிறைவேற்றும் நோக்கத்திற்கு அல்லது அவற்றிற்குப் பயனளிக்கும் நோக்கத்திற்கும் குறிப்பாக பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது எவையேனும் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :—

(அ) ஒன்பதாம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின்கீழ் எத்தக் காலப்பகுதிக்கும் எந்நியதி நிபந்தனைகளுக்கமைவாகவும் உரிமங்கள் வழங்கப்படலாமோ அந்தக் காலப்பகுதியும் அந்நியதி நிபந்தனைகளும்;

(ஆ) ஒன்பதாம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின்கீழ் விண்ணப்பங்கள் செய்யப்படக்கூடியதும் கையுதிர்க்கப்படக்கூடியதுமான விதமும் முறையும் ;

(இ) விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தின் இப்பாகத்தினால் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமம் அல்லது எக்கருமமும் தொடர்பில் இச்சட்டத்தின் இப்பாகத்தினால் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றதோ அக்கருமம்,

(ஈ) ஒன்பதாம் பிரிவின் (1) உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமத்தை வைத்திருப்பவர்களால் அனுசரிக்கப்படவேண்டிய தர நிர்ணயங்கள்.

(2) நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் குடியியல் விமானப் போக்குவரத்து என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருடனும் சுற்றுலாப் பயணத்துறை என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருடனுமான கலந்தாலோசனையுடன் பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவையேனும் தொடர்பில் இச்சட்டத்தின் இவ்வாசகத்தின்கீழ் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :—

(அ) வானூர்தி மூலம் பிரயாணம் செய்வதற்கான பயணச்சீட்டுக்களின் விற்பனையும் வானூர்தி மூலம் பிரயாணம் செய்வதற்கான பயணங்களைப் பதிவு செய்தலும்;

(ஆ) வானூர்தி மூலம் ஏற்றுமதிகள் மீதான தரகுக் கட்டணங்களைச் சேகரித்தல்;

(இ) வானூர்தி மூலம் சரக்குகளை ஏற்றிச் செல்வதற்கான ஒப்பந்தம் இலங்கையில் செய்யப்படுமிடத்து வானூர்தி மூலம் இறக்குமதிகள் மீதான தரகுக் கட்டணங்களை அறவிடுதல்;

(ஈ) பின்வருவன பற்றிய விவரங்கள் உட்பட இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் இணங்கியொழுகப்படுகின்றன என்பதனை உறுதிப்படுத்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லாக் கூற்றுக்களையும் அல்லது 9 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமங்களை வைத்திருப்பவர்களால் வெளிப்படுத்துகைகளைக் கொடுத்துதவுதல் :—

(i) ஏதேனும் மாதத்தில் வழங்கப்பட்ட எல்லாப் போக்குவரத்து ஆவணங்களும்; அத்தகைய வழங்கீடு பணச் சேகரிப்புகளை ஈடுபடுத்தியாயினுஞ்சரி அல்லாவிடினுஞ் சரி;

(ii) பிரயாணச் சீட்டுக்களின் விற்பனையிலிருந்தும் தரகுக் கட்டணங்களிலிருந்தும் ஏதேனும் மாதத்தில் பயனுறுத்தப்பட்ட பணச் சேகரிப்புக்களின் மொத்தம்;

(iii) இலங்கையில் வழங்கப்பட்ட வான் போக்குவரத்து ஆவணங்களுக்கு எதிராக அளிக்கப்பட்ட மீளளிப்புகள்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்பட வேண்டும் என்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், அது கசெற்றில் வெளியிடப்பட்டதன் பின் வசதிப்படக்கூடியவாறான விரைவில் அங்கீகாரத்துக்கென பாராளுமன்றத்தின் முன் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால் அதன்கீழ் முன்னராகச் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி நீக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

## பாகம் IV

### விமான நிலையங்களினதும் வானூர்திகளினதும் பாதுகாப்பு

14. இச்சட்டத்தின் இப்பாகம் எந்நோக்கங்களுக்கு ஏற்புடையதாகின்றதோ அந்நோக்கங்களாவன — *வானூர்தி விமான நிலையம் முதலியவற்றின் பாதுகாப்பு.*

(அ) வானூர்தியினதும் வானூர்தியிலுள்ள ஆட்களினதும் அல்லது ஆதனத்தினதும் ;

(ஆ) விமான நிலையங்களினதும் ஏதேனும் நேரத்தில் வானூர்தியொன்றில் ஏதேனும் பாகத்தில் சமூகமாயிருக்கின்றவாறான அத்தகைய ஆட்களினதும் அல்லது ஆதனத்தினதும் அல்லது விமான நிலையமொன்றின் பாகமாக அமையும் ஆதனத்தினதும்; அத்துடன்

(இ) விமான நிலையமொன்றின் பாகமாக அமையாத எவையேனும் வான்செலவு நிறுவுகைகளினதும்,

பாதுகாவலையும் பாதுகாப்பையும் பாதிக்கும் செயல்களுக்கு எதிரான முற்காப்பாதல் வேண்டும்.

குடியியல் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் வானூர்தித் தொழிற்பாடுகள் மீது அறிவித்தல் வழங்கல்.

15. (1) வான் செலவுச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட (இதனகத்துப்பின்னர் இச்சட்டத்தின் இப்பாகத்தில் "குடியியல் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும் குடியியல் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம்) இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட அல்லது தொழிற்படும் ஒரு வானூர்தியின் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வானூர்திகளின் தொழிற்பாட்டாளரான எவரேனும் ஆளுக்கு அல்லது இலங்கையிலுள்ள ஏதேனும் விமான நிலையத்தை முகாமை செய்யும் முகவருக்கு 14 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காக, விடயத்துக்கேற்றவாறு, இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட அல்லது தொழிற்படுத்தும் எந்த வானூர்தியின் தொழிற்பாட்டாளராக அவர் இருக்கின்றாரோ அந்த வானூர்தி தொடர்பில் அல்லது அந்த விமான நிலையம் தொடர்பில் எடுக்கப்படுகின்றதான, அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டவொரு விவரணத்தினதான வழிமுறைகள் பற்றி, அறிவித்தலின் தேதியிலிருந்து நான்கு வாரங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்குள் குடியியல் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்குமாறு அத்தகைய ஆளை அல்லது முகவரைத் தேவைப்படுத்தலாம்.

(2) (அ) ஓராம் உட்பிரிவின் கீழ், அறிவித்தலொன்றின் மூலம் அவர் மீது சுமத்தப்பட்ட தேவைப்பாட்டிற்கு இணங்கியொழுக மறுக்கின்ற அல்லது நியாயமான செயல்விளக்கமின்றி இணங்கியொழுகத் தவறுகின்ற; அல்லது

(ஆ) அத்தகைய ஏதேனும் தேவைப்பாட்டிற்கு இணங்கியொழுகி ஏதேனும் தகவலைக் கொடுத்தவுகையில் முக்கியமான விவரமொன்றில் பொய்யானதென அவர் அறிந்திருக்கின்ற கூற்றொன்றைச் செய்கின்ற அல்லது அசட்டையாக முக்கியமான விவரமொன்றில் பொய்யான கூற்றொன்றைச் செய்கின்ற;

ஆளெவரும் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவானொருவர், முன்னிலையில் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றந்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

குடியியல் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் பணிப்புகள் வழங்கல்.

16. (1) குடியியல் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் 15 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட நோக்கங்களுக்கென இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட அல்லது தொழிற்படும் ஏதேனும் ஒரு வானூர்தியின் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வானூர்திகளின் தொழிற்பாட்டாளருக்கு அல்லது அவரால் முகாமை செய்யப்படும் இலங்கையிலுள்ள ஏதேனும் விமான நிலைமை தொடர்பில் முகவருக்கு —

(அ) பணிப்புரையில் குறித்துரைக்கப்படுகின்றவாறான அவ்வாட்களை அல்லது அவ்வாதனத்தைப் பற்றிய அத்தகைய தேடுகைகள் அதிகாரமளிக்கப்பட்ட பாதுகாப்பு ஆளணியினரால் மேற்கொள்ளப்பட்டிருந்தாலன்றி பணிப்புரை எந்த வானூர்தியை தொடர்புறுத்துகின்றதோ அந்த வானூர்திக்குள் எவரேனும் ஆளைப் போகச் செய்வித்தலோ அல்லது அனுமதித்தலோ அல்லது ஆதனம் போகவோ அல்லது எடுத்துச் செல்லப்படவோ அல்லது வானூர்திக்கு அருகில் கொண்டுவரப்படச் செய்வித்தலோ அல்லது அனுமதித்தலோ கூடாதென்; அல்லது

(ஆ) பணிப்புரையில் குறித்துரைக்கப்படுகின்றவாறு வானூர்தியின் அத்தகைய தேடுகைகள் அதிகாரமளிக்கப்பட்ட ஆளணியினரால் மேற்கொள்ளப்பட்டிருந்தாலன்றி அத்தகைய ஏதேனும் வானூர்தியைப் பறக்கச் செய்வித்தலோ அல்லது அனுமதித்தலோ ஆகாதென,

விடயத்திற்கேற்றவாறு இயக்குநரை அல்லது முகவரைத் தேவைப்படுத்தி எழுத்தில் பணிப்புரையொன்றை வழங்கலாம்.

(2) இந்த உட்பிரிவின்கீழ் அவருக்கு வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புரைக்கு இணங்கியொழுகத் தவறும் ஆளெவரும் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவானொருவர் முன்னிலையில் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப் பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

(3) பதினான்காம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காக குடியியல் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் —

(அ) விமான நிலையத்தின் அல்லது அதன் ஏதேனும் பாகத்தின் ;

(ஆ) பணிப்புரை வழங்கப்பட்ட நேரத்தில் அல்லது ஏதேனும் அடுத்துறும் நேரத்தில் விமான நிலையத்தின் ஏதேனும் பாகத்திலுள்ள ஏதேனும் வானூர்தியின்; அத்துடன்

(இ) ஏதேனும் அத்தகைய நேரத்தில் விமான நிலையத்தின் ஏதேனும் பாகத்தில் இருக்கக்கூடியதான ஆட்களின் அல்லது வானூர்தி அல்லது ஆதனத்தின்,

தேடுகைகள் உட்பட அத்தகைய விமான நிலையத்தின் தேடுகையை அனுமதிக்குமாறு விமான நிலையமொன்றின் முகாமையாளரைத் தேவைப்படுத்தும் எழுத்திலான பணிப்பொன்றை அவருக்கு வழங்கலாம்.

(4) இப்பிரிவின் கீழ் விமான நிலையமொன்றின் முகாமையாளருக்கு வழங்கப்பட்ட பணிப்புரையொன்று அப்போதைக்கு வலுவிலிருக்கின்றவிடத்து விமான நிலையத்தின் ஏதேனும் பாகத்தில் அபாயகரமான பொருளொன்றுள்ளது என அல்லது கொண்டுவரப்படலாம் எனச் சந்தேகிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட பாதுகாப்பு ஆளணியினருக்கு நியாயமான காரணமிருப்பின் அப்பொழுது அவர் இவ்வுட்பிரிவின் பயனைக் கொண்டும் எழுத்தாணையொன்றின்றியும் விமான நிலை

யத்தின் ஏதேனும் பாகத்தில் அல்லது அத்தகைய விமான நிலையத்தின் ஏதேனும் பாகத்தை அப்போதைக்கிருப்பதான அல்லது இருப்பவரான ஏதேனும் வானூர்தியை, வாகனத்தை, பொருட்களை அல்லது ஏதேனும் விவரணத்தினதான வேறு அசையும் ஆதனத்தை அல்லது எவரேனும் ஆளை தேடுதல் செய்யலாம் என்பதுடன் அந்நோக்கத்திற்கென—

(அ) அவசியமானால் அத்தகைய விமான நிலையத்திலுள்ள ஏதேனும் கட்டடத்தினுள் அல்லது விமான நிலையத்திலுள்ள ஏதேனும் காணியின்மீது வலோற்காரமாக பிரவேசிக்கலாம்; அத்துடன்

(ஆ) விமான நிலைய முகாமையாளரின் ஒருப்பாட்டைப் பெற்றுக் கொண்ட பின்னர் ஏதேனும் அத்தகைய வானூர்தியை நிறுத்தித் தடுத்து வைக்கலாம்;

(இ) அத்தகைய வாகனத்தை பொருட்களை, ஆதனத்தை அல்லது ஆளை நிறுத்தி தகுந்த விதத்திலும் சட்டத்திற்கிணங்கவும் தேடுதல் செய்வதற்கு எவ்வளவு காலம் அவசியமாகின்றதோ அவ்வளவு காலத்திற்கு அதனை அல்லது அவரைத் தடுத்து வைக்கலாம்.

(5) எவரேனும் ஆளுக்கு —

(அ) உட்பிரிவு (3) என்பதன் கீழ் வழங்கப்பட்ட பணிப் பொன்றுக்கு இணங்கியொழுக மறுக்கின்ற அல்லது தவறுகின்ற; அல்லது

(ஆ) உட்பிரிவு (4) என்பதன்கீழ் அவருக்கு உரித்தாக்கப் பட்ட தத்துவமொன்றைப் பிரயோகிக்கையில் ஆளொருவரைத் தடுக்கின்ற அல்லது தடைசெய்கின்ற ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவானொருவர் முன்னிலையில் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப் பணத்திற்கு அல்லது இரண்டு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொரு வகை மறியற் றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மறியற் றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(6) ஆளெவரும் —

(அ) இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் வானூர்தியில், அவ்வானூர்தி இலங்கையிலிருக்கின்ற ஒரு நேரத்திலாயினுஞ்சரி இல்லாதவொரு நேரத்திலாயினுஞ்சரி; அல்லது

(ஆ) வேறு ஏதேனும் வானூர்தியில், அது இலங்கையில் இருக்கும் அல்லது இலங்கைக்கு மேலாகப் பறந்துகொண்டிருக்கும் ஒரு நேரத்தில்; அல்லது

(இ) இலங்கையிலுள்ள விமான நிலையமொன்றில் ஏதேனும் பாகத்தில் அல்லது விமான நிலையமொன்றின் நுழைவாயிலில்; அல்லது

(ஈ) இலங்கையிலுள்ளதும் விமான நிலையமொன்றின் பாகமாக அமையாததுமான ஏதேனும் வான்செலவு நிறுவுகையில், சட்டபூர்வமான அதிகாரமின்றி அல்லது நியாயமான செயல்விளக்கக் காரணமின்றி (இதற்கான எண்பிப்பு அவரிடத்திலிருத்தல் வேண்டும்.) ஏதேனும் அபாயகரமான பொருளை அவரிடத்தில் வைத்திருத்தல் அவருக்குத் தவறொன்றாதல் வேண்டும்.

(7) இப்பிரிவின் நோக்கங்களுக்காக "அபாயகரமான பொருள்" என்பது—

(அ) வேட்டு தீர்க்கக்கூடிய ஆற்றலுடையதாயினுஞ்சரி அல்லாவிடினுஞ்சரி, ஏதேனும் சுடுபடைக்கலம் அல்லது சுடுபடைக்கலம் ஒன்றின் தோற்றத்தையுடைய ஏதேனும் பொருள்;

(ஆ) வெடிப்பதன்மூலம் செயல்முறைப் பயனுறுதியொன்றை உண்டுபண்ணும் ஆற்றலுடையதாயினுஞ்சரி அல்லாவிடினுஞ்சரி ஏதேனும் வெடிக்கும் பொருள், வெடிக்கும் பொருள் ஒன்றின் தோற்றத்தைக் கொண்டிருக்கக்கூடியவாறு எறிகுண்டு ஒன்றின் வடிவத்திலாயினுஞ்சரி அல்லது வேறு வகையிலாயினுஞ்சரி உற்பத்தி செய்யப்பட்ட அல்லது மாற்றியமைக்கப்பட்ட ஏதேனும் பொருள், அல்லது அது வெடிக்கும் பொருளொன்று அல்லது வெடிக்கும் பொருளொன்றை உள்ளடக்கியிருக்கின்றது என்பதனை சுட்டிக்காட்டக்கூடியவாறு அடையாளமிடப்பட்ட அல்லது சுட்டுத்துண்டிடப்பட்ட ஏதேனும் பொருள்; அத்துடன்

(இ) ஆளொருவருக்கு ஊறுவிளைவிப்பதற்கு அல்லது அவரை ஆற்றலிழந்தவராக்குதற்கு அல்லது ஆதனத்தை அழிப்பதற்கு அல்லது சேதப்படுத்துவதற்கு பயன்படுத்துவதற்கென அல்லது தம்முடன் அதனை வைத்திருக்கும் ஆள், அவரால் ஆயினுஞ்சரி அல்லது வேறு எவரேனும் ஆளினாலாயினுஞ்சரி அவரால் முன்னப்பட்டவாறான அத்தகைய பாவனைக்கெனச் செய்யப்பட்ட அல்லது மாற்றியமைக்கப்பட்ட ஏதேனும் பொருள் என்று,

பொருள்படும்.

(8) உட்பிரிவு (6) என்பதன்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாகும் ஒவ்வோராளும் நீதிவானொருவர் முன்னிலையில் சுருக்கமுறை விளக்கத்தின்பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் மூன்று ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

முகவரால் விமான நிலையப் பாதுகாப்புச் சேவை பேணப்படல்.

17. முகவரான 15 ஆம் பிரிவில் தரப்பட்டுள்ள நோக்கங்களுக்கென, இலங்கை அரசாங்கத்தின் சார்பில் அவரால் நிருவகிக்கப்படும் ஏதேனும் விமான நிலையத்தின் எல்லைகளுக்குள் (இதனகத்துப்பின்னர் "பாதுகாப்புச் சேவை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) விமான நிலையப் பாதுகாப்புச் சேவையொன்றைப் பேணுதல் வேண்டும்.

பாதுகாப்புச் சேவை உறுப்பினரின் கடமைகள்.

18. பின்வருவன, 17 ஆம் பிரிவின்கீழ் பேணப்படும் பாதுகாப்புச் சேவை உறுப்பினர் ஒவ்வொருவரினதும் கடமையாதல் வேண்டும்:—

(அ) இலங்கை அரசாங்கத்தினதும் முகவரினதும் ஆதனத்தைப் பாதுகாத்தலும் இடர்காத்தலும் விமான நிலையத்தினுட் செல்லும்

அல்லது அதனைப் பயன்படுத்தும் ஆட்களினதும் அத்துடன் அவ்வாறு பணிக்கப்பட்டவிடத்து விமானநிலையத்தின் எல்லைக்குள்ளிருக்கும் வானூர்தியினதும் வேறு உபகரணத்தினதும் பாதுகாப்பை நியாயமான முறையில் உறுதிப்படுத்துதலும்;

(ஆ) விமான நிலையத்தினுள் சட்டமீறல்கள், தொல்லைகள் எல்லாவற்றையும் தடைசெய்வதற்கு அவரது சிறந்த முயற்சிகளையும் ஆற்றலையும் பயன்படுத்துதல்;

(இ) விமான நிலையத்தினுள் எவரேனும் முறைகேடான, சந்தேகத்திற்குரிய ஆளை கைதுசெய்தல்;

(ஈ) இலங்கை அரசாங்கத்தின் அல்லது முகவரின் ஆதனத்தையும் விமான நிலையத்தினுள் செல்லும் அல்லது அதனைப் பயன்படுத்தும் ஆட்களையும் பாதுகாப்பதற்கும் இடர்காப்பதற்கும் அவசியமான அல்லது முகவரால் தேவைப்படுத்தப்பட்ட அல்லது கட்டளையிடப்பட்ட வேறு ஏதேனும் செயலைச் செய்தல்;

(உ) விமானநிலையத்தினதும் அதனைப் பயன்படுத்துவோரினதும் வானூர்தி உட்பட அதற்குட்பட்ட ஆதனத்தினதும் பாதுகாப்பு மற்றும் இடர்காப்பு தொடர்பில் குடியியல் விமானப் போக்குவரத்துச் சேவையின் பணிப்பாளர் நாயகத்தால் முகவருக்குக் கொடுக்கப்பட்ட பணிப்புகளுக்கு இணங்கியொழுகுவதில் வேறு வகையில் துணைபுரிதல்.

பாதுகாப்புச் சேவை உறுப்பினர்களின் தத்துவங்கள்.

19. (1) பதினேழாம் பிரிவின்கீழ் பேணப்படும் பாதுகாப்புச் சேவையின் எவரேனும் உறுப்பினர், விமானநிலையத்தின் எல்லைகளுக்குள் பின்வருவோரைத் தடுத்துவைத்தல் அவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :—

(அ) இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் அல்லது 1982 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, வானூர்திக்கு எதிரான தவறுகள் சட்டத்தின் கீழ் தவறொன்றைப் புரியும் அல்லது புரிந்துகொண்டிருக்கும் எவரேனும் ஆளை;

(ஆ) எந்த ஆளுக்கெதிராக, அவர் இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் அல்லது 1982 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, வானூர்திக்கு எதிரான தவறுகள் சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரியவிருக்கின்றார் என அல்லது தவறொன்றுக்குக் குற்றவாளியாயிருக்கின்றார் என நியாயமான சந்தேகம் நிலவுகின்றதோ அந்த எவரேனும் ஆளை;

(இ) எந்த ஆளுக்கெதிராக அவர் இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் ஏதேனும் தவறைப் புரிவதில் அல்லது 1982 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, வானூர்திக்கு எதிரான தவறுகள் சட்டத்தின் கீழ் தவறுகளைப் புரிவதில் உதவிசெய்தும் உடந்தையாயிருந்தும் இருக்கின்றார் என்ற நியாயமான சந்தேகம் நிலவுகின்றதோ அந்த எவரேனும் ஆளை;

(ஈ) சட்டமுறையான செயல் விளக்கமின்றி, தீங்கு விளைவிக்கும் அல்லது அபாயகரமான ஏதேனும் ஆயுதத்தைத் தமது கட்டுக்காப்பில் அல்லது உடைமையில் வைத்திருக்கும் எவரேனும் ஆளை;

(உ) களவாடப்பட்ட அல்லது மோசடியாகப் பெறப்பட்ட ஆதனமென நியாயமான சந்தேகிக்கப்படும் பொருட்களை தமது உடைமையில் வைத்திருக்கும் எவரேனும் ஆளை;

ஆயினும், எவ்வாறாயினும் அத்தகைய ஆள் சுங்கக் கட்டளைச் சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளை மீறிச் செயற்பட்டுள்ளார் என அல்லது செயற்படுகின்றார் என நம்புவதற்கு காரணமிருக்குமிடத்து, அத்தகைய ஆள் அக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க கையாளப்படுவதற்கென சுங்க அலுவலர் ஒருவரிடம் உடனடியாகக் கையளிக்கப்படுதல் வேண்டும் ;

(ஊ) ஆளொருவர், 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின்கீழ் எந்தத் தவறு தொடர்பில் எழுத்தாணையொன்றில்லாமல் கைது செய்யப்படலாமோ அந்தத் தவறொன்றை விமான நிலையத்திற்குள் புரிகின்ற எவரேனும் ஆளை;

(எ) இலங்கை அரசாங்கத்திற்கு அல்லது முகவருக்கு உரித்தான அல்லது இலங்கை அரசாங்கத்தின் அல்லது முகவரின் உடைமையிலுள்ள ஏதேனும் ஆதனத்தைத் திருடுகின்ற அல்லது அதனைச் சேதப்படுத்துகின்ற எவரேனும் ஆளை;

(ஏ) எந்த ஆள், இலங்கை அரசாங்கத்திற்கு அல்லது முகவருக்கு உரித்தான அல்லது இலங்கை அரசாங்கத்தின் அல்லது முகவரின் உடைமையிலுள்ள ஏதேனும் ஆதனத்தின் திருட்டைப் புரிந்துள்ளார் அல்லது அதற்கு சேதத்தை ஏற்படுத்தியுள்ளார் அல்லது திருட்டைப் புரியவுள்ளார் அல்லது சேதத்தை ஏற்படுத்தவுள்ளார் என நம்புவதற்கான காரணமளிக்கும் சூழ்நிலைகளில் விமான நிலையத்திற்குள் காணப்படுகின்றாரோ அந்த ஆள் எவரையும் ;

(ஐ) எந்த ஆள், 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் பிடியாணையின்றிக் கைது செய்தகு தவறொன்றை அல்லது இச்சட்டத்தின் இப்பாகத்தின் கீழ் அல்லது 1982 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, வானூர்திக்கு எதிரான தவறுகள் சட்டத்தின் கீழ் தவறொன்றைப் புரியும் கருத்துடன் முற்பாதுகாப்புப் பெறுகின்றார் என நம்புவதற்கு காரணமளிக்கும் சூழ்நிலைகளின்கீழ் அவரது சமுகத்தை மறைப்பதற்காக அத்தகைய முற்பாதுகாப்பைப் பெறுவதாகக் காணப்பட்ட எவரேனுமாளை.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் தடுத்து வைக்கப்பட்ட எவரேனும் ஆள் விடுவிக்கப்பட்டாலன்றி, சட்டத்திற்கிணங்க கையாளப்படுவதற்கென பொலிசு அலுவலரொருவரிடம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

தேடுதல் செய்வதற்கு பாதுகாப்பு சேவையின் எவரேனும் உறுப்பினருக்குள்ள தத்துவம்.

20. எவரேனும் ஆள் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் பிடியாணையின்றி கைது செய்தகு தவறொன்றை அல்லது இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் அல்லது 1982 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, வானூர்திற்கு எதிரான தவறுகள் சட்டத்தின்கீழ் ஏதேனும் தவறைப் புரிந்துள்ளார் அல்லது அத்தகைய தவறைப் புரியவிருக்கின்றார் என நம்புவதற்கு 18 ஆம் பிரிவின்கீழ் பேணப்படும் பாதுகாப்புச் சேவையின் எவரேனும் உறுப்பினருக்குக் காரணமிருக்கும் போது அத்தகைய ஆளின் உடைமைகள் அல்லது அத்தகைய ஆளினால் பயன்படுத்தப்பட்ட செல்கலம் உட்பட அத்தகைய ஆளைத் தேடுதல் செய்தல் அத்தகைய உறுப்பினருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், பெண்ணொருவரைத் தேடுதல் செய்விக்கும் அவசியமுள்ளவிடத்து, அத்தகைய தேடுதல் நற்பண்பினை கண்டிப்புடன் கருத்திற்கொண்டு வேறொரு பெண்ணினால் செய்யப்படுதல் வேண்டும்.

தீயின் விடயத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள்

21. விமான நிலையத்திற்குள் ஏற்படும் தீ அல்லது வேறு ஏதேனும் அசம்பாவிதம் பற்றிய எல்லா விடயங்களிலும் அத்தகைய விமான நிலையத்திற்குள் கடமையிலிருப்பவரான, 17 ஆம் பிரிவின்கீழ் பேணப்படும் பாதுகாப்பு சேவையின் உறுப்பினர் ஒவ்வொருவரும் அதன் மூலம் ஆபத்துக்குள்ளான ஆட்களையும் ஆதனத்தையும் பாதுகாப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும்.

இச்சட்டத்தின் இப்பாகத்தின் கீழ் நல்லெண்ணத்துடன் எடுக்கப்படும் நடவடிக்கைக்கான பாதுகாப்பு.

22. பதினேழாம் பிரிவின்கீழ் முகவரால் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் பேணப்பட்ட பாதுகாப்புச் சேவையின் உறுப்பினரால் இச்சட்டத்தின் இப்பாகத்தின் கீழ் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட அல்லது செய்யாது விடப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் அல்லது விமான நிலையமொன்றிற்குள்ளே அல்லது அதற்கு வெளியே ஆட்களின் அல்லது ஆதனத்தி பாதுகாப்பை அல்லது இடர்காப்பை உறுதிப்படுத்துதல் தொடர்பில் அல்லது அது தொடர்பில் அத்தகைய உறுப்பினரின் ஏதேனும் தவறுகை தொடர்பில் அத்தகைய பாதுகாப்புச் சேவையின் உறுப்பினருக்கெதிராக தொடர்ச்சி அல்லது வழக்குத்தொடுப்பு எதுவும் இருத்தலாகாது.

பாதுகாப்பு சேவையின் ஊழியர் கோப்பு முதலியன செயலாளரால் அங்கீகரிக்கப்படல்.

23. பதினேழாம் பிரிவின்கீழ் பேணப்படும் பாதுகாப்புச் சேவையின் ஊழியர் கோப்பு அத்தகைய சேவையின் உபயோகத்திற்கானவையும் அதன் எவரேனும் உறுப்பினரால் கொண்டு செல்லப்படக் கூடியவையுமான சுடுபடைக்கலங்கள், வெடிமருந்துகள் என்பவற்றின் தன்மை இனம் அத்துடன் தொகை என்பன செயலாளரின் முன் அங்கீகாரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

பொருள் கோடல்

**24.** இச்சட்டத்தின் இப்பாகத்தில் சந்தர்ப்பம் வேறுவகைபாகத் தேவைப்படுத்தினாலன்றி —

"மூகவர்" என்பது வான்செலவுச் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருக்கிறது ;

"விமான நிலையம்" என்பது வான் செலவுச் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருக்கிறது.

"அதிகாரமளிக்கப்பட்ட பாகாப்பு ஆளணியினர்" என்பது 14 ஆம் பிரிவின் கீழ் மூகவரால் பேணப்படும் பாதுகாப்புச் சேவையின் உறுப்பினர் ஒருவர் என்று பொருள்படும் என்பதோடு விமான நிலையத்திற்குள் தமது கடமையைப் புரிகின்ற அல்லது புரிவதற்கென அழைக்கப்பட்ட ஆயுதந்தாங்கிய படைகளின் அல்லது பொலிசுப் படையின் எவரேனும் உறுப்பினரையும் உள்ளடக்கும் ;

"விமான நிலைய முகாமையாளர்" என்பது விமான நிலையமொன்று தொடர்பில் மூகவரால் நியமிக்கப்பட்ட முகாமையாளர் அல்லது விமான நிலைய முகாமையாளராக பதிற் கடமையாற்றும் ஆள் என்று பொருள்படும் ;

"தொழிற்படுத்துநர்" என்பது வானூர்தியொன்று தொடர்பில் அப்போதைக்கு வானூர்தியின் முகாமைத்துவத்தைக் கொண்டுள்ள ஆள் என்று பொருள்படும், அத்துடன்

"செயலாளர்" என்பது குடியியல் விமானப் போக்குவரத்து என்னும் விடயத்திற்குப் பொறுப்பாயுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் என்று பொருள்படும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல.

**25.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்கும் இடையே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

அட்டவணை. (பிரிவு 6)

**ஹேக் நகரில் திருத்தப்பட்டவாறான வார்சோ சமவாயம்**

**அத்தியாயம் 1 — நோக்கெல்லை — வரைவிலக்கணங்கள்**

உறுப்புரை 1

(1) இச்சமவாயமானது, ஆட்கள், பொதி அல்லது சரக்கு சன்மானத்திற்காக வானூர்தியினால் சர்வதேச ரீதியில் ஏற்றிச் செல்லப்படும் எல்லாச் செயற்பாடுகளுக்கும் ஏற்புடையதாகும். [illegible] பொறுப்பு முயற்சியொன்றினால் கைமாறு கருதாமல் வானூர்தியால் ஏற்றிச்செல்லப்படுவதற்கும் இது அதேபோல ஏற்புடையதாகும்.

(2) இச்சமவாயத்தின் நோக்கங்களுக்காகச் சர்வதேச ரீதியில் ஏற்றிச்செல்லல் என்னும் சொல்லமைப்பானது, [illegible]வர்களுக்கிடையிலான உடன்படிக்கைக்கிணங்க, ஏற்றிச் செல்லலில் ஓர் இடைநிறுத்தம் அல்லது வான்பலமாற்

றம் இருப்பினுஞ்சரி இல்லாவிடினுஞ்சரி, உயர் ஒப்பந்தஞ்செய்யும் இரு திறத்தவர்களின் ஆட்புலங்களுக்குள் அமைந்திருப்பினுஞ்சரி அல்லது உயர் ஒப்பந்தஞ் செய்யும் ஒரு திறத்தவரின் ஆட்புலத்தினுள் அமைந்திருப்பினுஞ்சரி இன்னோர் அரசின் ஆள்புலத்திற்குட்பட்டதான உடன்பட்டுக் கொள்ளப்பட்ட நிறுத்திடமொன்றிருப்பின், அந்த அரசு உயர் ஒப்பந்தம் செய்யும் ஒரு திறத்தவராக இல்லாதபோதிலும் எந்த ஏற்றிச் செல்லலுக்குள் புறப்படும் இடமும் சேரிடமும் அமைந்துள்ளனவோ அந்த ஏற்றிச் செல்லல் என்று பொருள்படும்.

(3) அடுத்துவரும் பல வானூர்திகளினால் புரியப்படும் ஏற்றிச்செல்லல் சேவையானது, இச்சமவாயத்தின் நோக்கங்களுக்காக, ஓர் ஒப்பந்தப்படிவத்தின்கீழ் உடன்பட்டுக்கொள்ளப்பட்டிருப்பினுஞ்சரி, பல ஒப்பந்தத் தொகுதிகளின்கீழ் உடன்பட்டுக்கொண்டிருப்பினுஞ்சரி, திறத்தவர்களால் ஒரு தொழிற்பாடாகக் கருதப்பட்டிருப்பின், பிரிக்கப்படாத ஒரு போக்குவரத்துச் சேவையாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் ஓர் ஒப்பந்தம் அல்லது பல ஒப்பந்தத் தொகுதிகள் ஒரே அரசின் ஆட்புலத்திற்குள் முற்றிலும் நிறைவேற்றப்படவிருப்பதன் காரணத்தினால் மட்டும் அதன் சர்வதேசப் பண்பை இழந்துவிடவும் மாட்டாது.

உறுப்புரை 2

(1) இச்சமவாயம் அரசினால் அல்லது சட்டமுறையாக அமைத்துருவாக்கப்பட்ட பகிரங்கக் குழுக்களினால் புரியப்படும் ஏற்றிச் செல்லல் தொழிற்பாட்டிற்கு ஏற்புடையதாகும். ஆயினும் அது 1 ஆம் உறுப்புரையில் விதித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.

(2) இச்சமவாயம், அஞ்சல் மற்றும் தபாற் பொதிகளுக்கு ஏற்புடையதாக மாட்டாது.

## அத்தியாயம் II
## ஏற்றிச்செல் ஆவணம்

பிரிவு 1—பிரயாணிகளின் பயணச்சீட்டு

உறுப்புரை 3

(1) பிரயாணிகளை ஏற்றிச் செல்லல் தொடர்பில் பின்வருவன அடங்கிய அனுமதிச் சீட்டொன்று ஒப்படைத்தல் வேண்டும்:—

(அ) புறப்படும் இடத்தையும் சேரிடத்தையும் பற்றிய ஓர் குறிப்பீடு.

(ஆ) புறப்படும் இடமும் சேரிடமும் உயர் ஒப்பந்தத் திறத்தவர் ஒருவரின் ஆள்புலத்திற்குட்பட்டதாகவும் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட ஒரு நிறுத்திடம் அல்லது பல நிறுத்திடங்கள் இன்னுமோர் ஆள்புலத்திற்குட்பட்டதாகவுமிருப்பின் ஆகக் குறைந்தது அத்தகைய நிறுத்திடம் ஒன்றை யாவது பற்றிய குறிப்பீடு.

(இ) பிரயாணி ஒருவரின் பிரயாணம் புறப்படும் நாடு அல்லாத வேறொரு நாட்டிலுள்ள இறுதிச் சேர்விடமொன்றை ஈடுபடுத்துமாயின், வார்சோ ஒப்பந்தம் ஏற்புடைத்தாகலாம் எனவும்; அத்துடன் சமவாயமானது இழப்பிற்கும் அல்லது ஆளுக்குரிய ஊறுக்கும் அத்துடன் பயணப் பொதியின் இழப்பு அல்லது அதற்கான சேதம் தொடர்பிலும் செல்கலத்தின் பொறுப்பின்மீது சட்டக்கட்டுப்பாடு உடையதாயிருக்கும் என்பதுடன் பெரும்பாலான விடயங்களில் அதனை மட்டுப்படுத்துகிறது.

(2) பிரயாணிகளின் பயணச்சீட்டானது, ஏற்றிச்செல்லல் பற்றிய முடிவுகளினதும் நிபந்தனைகளினதும் முதற்தோற்றச் சான்றாக அமைதல் வேண்டும். பிரயாணிகளின் பயணச்சீட்டு இல்லாதிருப்பது அதன் ஒழுங்கீனம் அல்லது இழப்பு ஏற்றிச்செல்லல் பற்றிய ஒப்பந்தத்தின் உளதாம் தன்மையை அல்லது செல்லுபடியாகுந்தன்மையைப் பாதிக்கமாட்டாது. இருப்பினும், அது இச்சமவாயத்தின் விதிகளுக்கு அமைந்தாதல் வேண்டும். எனினும் ஏற்றிச்செல்பவரின் சம்மதத்துடன் பிரயாணியொருவர் பயணச் சீட்டொன்று ஒப்படைக்கப் பெறாமல் ஏறிச்சென்றால் அல்லது பயணச்சீட்டு, இவ்வுறுப்புரையின் (1) (இ)

என்னும் பந்தியால் தேவைப்பட்ட அறிவித்தலை உள்ளடக்காவிடில் ஏற்றிச் செல்பவர் 22 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளைத் தமக்கெனப் பயன்படுத்திக் கொள்வதற்கு உரித்துடையவராதல் ஆகாது.

### பிரிவு 2—பயணப் பொதித் தணிக்கை

**உறுப்புரை 4**

(1) பதிவு செய்யப்பட்ட பயணப்பொதியை ஏற்றிச்செல்லல் தொடர்பாக, பயணப்பொதித் தணிக்கையொன்றை ஒப்படைக்கப்படுதல் வேண்டும். இது 3 ஆம் உறுப்புரையில் (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகும் பயணச் சீட்டுடன் இணைக்கப்பட்டாலன்றி அல்லது அதில் உட்புகுத்தப்பட்டாலன்றி பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) புறப்படும் இடத்தையும் சேரிடத்தையும் பற்றியவொரு குறிப்பீடு;

(ஆ) புறப்படும் இடமும் சேரிடமும் ஓர் உயர் ஒப்பந்தத் திறத்தவரின் ஆட்புலத்திற்குள் இருக்குமாயின் உடன்பட்டுக் கொள்ளப்பட்ட ஒரு நிறுத்திடம் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நிறுத்திடங்கள் வேறோர் அரசின் ஆட்புலத்திற்குள் இருக்கும் பட்சத்தில் ஆகக் குறைந்தது அத்தகைய ஒரு நிறுத்திடத்தையாவது பற்றிய குறிப்பீடு;

(இ) ஏற்றிச் செல்லலானது புறப்படும் நாட்டிலல்லாது வேறொரு நாட்டிலுள்ள இறுதியான சேர்விடத்தை அல்லது நிறுத்துகையை ஈடுபடுத்துமாயின் வார்சோ சமவாயம் ஏற்புடைத்தாகலாம் எனவும்; அத்துடன் சமவாயமானது பயணப்பொதியின் இழப்பு அல்லது அதற்கான சேதம் தொடர்பில் ஏற்றிச் செல்பவரின் பொறுப்பின் மீது சட்டக் கட்டுப்பாடுடையதாக இருக்குமென்பதுடன் பெரும்பாலான விடயங்களில் அப்பொறுப்பை மட்டுப்படுத்துவதாகவும் இருக்கும் எனவும் பயன்படத்தக்கதாக அனுப்புநருக்கு அறிவித்தலொன்று.

(2) பயணப்பொதித் தணிக்கையானது, பயணப்பொதியின், பதிவுக்கும் அத்துடன் ஏற்றிச் செல்லும் ஒப்பந்தத்தின் நிபந்தனைகளுக்கும் முதற் தோற்றச் சான்றாக அமைதல் வேண்டும். பயணப்பொதித் தணிக்கை இல்லாமையானது அல்லது அதன் ஒழுங்கீனமானது அல்லது இழப்பானது எவ்வாறாயினும் சமவாயத்தின் விதிகளுக்கு அமைந்ததாயிருக்கவேண்டிய ஏற்றிச் செல்லல் ஒப்பந்தம் உளதாயிருப்பதை அல்லது அதன் செல்லுபடியாகுந்தன்மையைப் பாதிக்கமாட்டாது. ஆயினும், ஏற்றிச்செல்பவர், பயணப்பொதித் தணிக்கையொன்று ஒப்படைக்கப்படாமல் பயணப்பொதியைப் பொறுப்பேற்றால் அல்லது பயணப் பொதித் தணிக்கையானது (3 ஆம் உறுப்புரையின் (1) (இ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகும் பயணச்சீட்டுடன் இணைக்கப்பட்டிருந்தாலன்றி அல்லது அதில் உட்படுத்தப்பட்டிருந்தாலன்றி) இவ்வுறுப்புரையின் பந்தி (1) (இ) என்பதனால் தேவைப்படுத்தப்பட்ட அறிவித்தலை உள்ளடக்காவிடில் அவர் 22 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளைத் தமக்கெனப் பயன்படுத்திக் கொள்வதற்கு உரித்துடையவராதல் ஆகாது.

### பிரிவு 3 — விமான வழிப்பட்டியல்

**உறுப்புரை 5**

(1) "விமான வழிப்பட்டியல்" என அழைக்கப்படும் ஆவணமொன்றைத் தயாரித்துத் தமக்குக் கையளிக்குமாறு அனுப்புநரைத் தேவைப்படுத்தும் உரிமை சரக்கை ஏற்றிச் செல்லும் ஒவ்வொருவருக்கும் உண்டு; இந்த ஆவணத்தை ஏற்றுக்கொள்ளுமாறு ஏற்றிச் செல்பவரைத் தேவைப்படுத்தும் உரிமை, அனுப்புநர் ஒவ்வொருவருக்கும் உண்டு.

(2) இந்த ஆவணம் இல்லாமையானது, அதன் ஒழுங்கீனமானது அல்லது இழப்பானது, 9 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைவாகவும், எனினும், இச்சமவாயத்தின் விதிகளின் சட்டக் கட்டுப்பாடுடையதுமாயிருக்கவேண்டிய ஏற்றிச் செல்லல் ஒப்பந்தம் உளதாயிருப்பதை அல்லது அதன் செல்லுபடியாகுந் தன்மையைப் பாதிக்கமாட்டாது.

**உறுப்புரை 6**

(1) விமான வழிப்பட்டியல் மூன்று மூலப் பாகங்களில் தயாரிக்கப்படுதலும் சரக்குடன் சேர்த்துக் கையளிக்கவும்படுதலும் வேண்டும்.

(2) முதலாம் பாகம் "ஏற்றிச் செல்பவருக்கு" என அடையாளமிடப்பட்டு அனுப்புநரால் கையொப்பமிடப்படுதல் வேண்டும். இரண்டாம் பாகம் "ஒப்படைப் பெறுநருக்கு" என அடையாளம் இடப்பட வேண்டும்; இது அனுப்புநராலும் ஏற்றிச் செல்பவராலும் கையொப்பமிடப்பட வேண்டும் என்பதுடன் சரக்குடன் சேர்த்தனுப்பப்படுதலும் வேண்டும். மூன்றாம் பாகம் ஏற்றிச் செல்பவரால் கையொப்பமிடப்பட்டு சரக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டபின்னர் அவரால் அனுப்புநருக்குக் கையளிக்கப்படவேண்டும்.

(3) ஏற்றிச் செல்பவர், சரக்கு வானூர்திக்கு ஏற்றப்படுமுன்னர் கையொப்பமிடுதல் வேண்டும்.

(4) ஏற்றிச் செல்பவரின் கையொப்பம் முத்திரையிடப்படலாம்; அனுப்புநரின் கையொப்பம் அச்சிடப்படலாம் அல்லது முத்திரையிடப்படலாம்.

(5) அனுப்புநரின் வேண்டுகோளின்பேரில் ஏற்றிச் செல்பவர் விமான வழிப் பட்டியலைத் தயாரிப்பாராயின், முரணானதற்கான எண்பிப்பிற்கு அமைய அவர் அனுப்புநரின் சார்பிலேயே அவ்வாறு செய்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

**உறுப்புரை 7**

ஒன்றுக்கு மேற்பட்ட பொதி இருக்குமிடத்து புறம்பான வழிப்பட்டியல்களைத் தயாரிக்கும்படி அனுப்புநரைத் தேவைப்படுத்தும் உரிமை சரக்கை ஏற்றிச் செல்பவருக்குண்டு.

**உறுப்புரை 8**

விமான வழிப்பட்டியலில் பின்வருவன அடங்கியிருத்தல் வேண்டும் :—

(அ) புறப்படும் இடத்தையும் சேரிடத்தையும் பற்றிய குறிப்பீடு;

(ஆ) புறப்படும் இடமும் சேரிடமும் உயர் ஒப்பந்தம் செய்து கொள்ளும் ஒரு திறத்தவரின் ஆள்புல நிலையினுள் ...டுக் கொள்ளப்பட்ட ஒரு நிறுத்திடம் அல்லது பல நிறுத்திடங்கள் வேறோர் அரசின் ஆள்புலத்தினுள்ளிருக்குமாயின் ஆகக் குறைந்தது அத்தகைய நிறுத்திடங்களுள் ஒன்றையாவது பற்றிய குறிப்பீடு;

(இ) ஏற்றிச் செல்லலானது புறப்படும் நாட்டிலல்லாது வேறொரு நாட்டில் இறுதியான சேரிடத்தை அல்லது நிறுத்துகையை ஈடுபடுத்துமாயின் வார்சோ ஒப்பந்தம் ஏற்புடைத்தாகலாம் எனவும் அத்துடன் சமவாயமானது, சரக்குகளின் இழப்பு அல்லது அதற்கான சேதம் தொடர்பில் ஏற்றிச்செல்பவரின் பொறுப்பின்மீது சட்டக் கட்டுப்பாடுடையதாக இருக்குமென்பதுடன் பெரும்பாலான விடயங்களில் அப்பொறுப்பை மட்டுப்படுத்துவதாகவும் இருக்கும் எனவும் பயன்படத்தக்கதாக அனுப்புநருக்கு அறிவித்தலொன்று.

**உறுப்புரை 9**

ஏற்றிச் செல்பவரின் சம்மதத்துடன், விமான வழிப்பட்டியலொன்று தயாரிக்கப்பட்டிராமல் சரக்கு வானூர்தியில் ஏற்றப்படுமாயின் அல்லது விமான வழிப் பட்டியலானது 8 ஆம் உறுப்புரையின் (இ) என்னும் பந்தியால் தேவைப்படுத்தப்பட்ட அறிவித்தலை உள்ளடக்கவில்லையாயின் ஏற்றிச்செல்பவர் ... ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் ஏற்பாடுகளைத் தமக்குச் சாதகமாக பயன்படுத்திக்கொள்ளும் உரித்துடையவராதல் ஆகாது.

உறுப்புரை 10

(1) அனுப்புநர் சரக்குத் தொடர்பாக விமான வழிப்பட்டியலிற் செருகும் விவரங்களினதும் கூற்றுக்களினதும் செம்மைக்கு அவரே பொறுப்பாதல் வேண்டும்.

(2) அனுப்புநரால் கொடுத்துதவப்படும் விவரங்களினதும் கூற்றுக்களினதும் ஒழுங்கினம், சரியின்மை அல்லது பூரணமின்மை காரணமாக அவருக்கேற்படும் அல்லது ஏற்றிச்செல்பவர் எந்த ஆளுக்குப் பொறுப்புள்ளவராக வருகின்றாரோ அந்த ஆளுக்கேற்படும் எல்லாச் சேதங்களுக்கும் எதிராக அனுப்புநர் ஏற்றிச்செல்பவருக்கு நட்டோத்திரவாதமளித்தல் வேண்டும்.

உறுப்புரை 11

(1) ஒப்பந்தத்தின் முடிவுக்கும் சரக்கு பெற்றுக்கொள்ளப்பட்டமைக்கும் ஏற்றிச்செல்லல் பற்றிய நிபந்தனைகளுக்கும் விமான வழிப்பட்டியல் முதற் தோற்றச் சான்றாதல் வேண்டும்.

(2) சரக்கின் எடை, அளவுக்கூறுத் தொகுதிகள், சிப்பம் என்பன தொடர்பிலும் சிப்பங்களின் எண்ணிக்கை தொடர்பிலும் விமான வழிப்பட்டியிலுள்ள உந்துக்கள், குறிப்பிடப்பட்ட நிகழ்வுகளுக்கான முதற்தோற்றச் சான்றாதல் வேண்டும்; சரக்கின் தொகை, அளவு, நிலைமை என்பன தொடர்பிலான கூற்றுக்கள், அவரால் அனுப்புநரின் முன்னிலையில் அவையிரண்டும் சரிபார்க்கப்பட்டுள்ள அளவுக்கும் சரிபார்க்கப்பட்டுள்ளதாக விமான வழிப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுக்கும் தவிர ஏற்றிச்செல்பவருக்கு எதிரான சான்றாக அமையவோ அல்லது சரக்கின் வெளிப்படையான நிலைமையைத் தொடர்புபடுத்தவோ மாட்டாது.

உறுப்புரை 12

(1) ஏற்றிச்செல்லல் பற்றிய ஒப்பந்தத்தின்கீழ் அவரது எல்லாக் கடப்பாடுகளையும் நிறைவேற்றுவதற்கான அவரது பொறுப்பிற்கமைய, சரக்கை புறப்படுமிடத்தின் அல்லது சேரிடத்தின் விமான நிலையத்தில் கைவாங்குவதன் மூலம் அல்லது பயணத்தின்போது ஏதேனும் தரையிறங்கலின்மீது அதனை நிறுத்திவைப்பதன்மூலம் அல்லது சேரிடத்தில் அல்லது பிரயாணத்தின்போது விமான வழிப்பட்டியலில் பெயர் குறிப்பிடப்பட்ட ஒப்படைப்பெறுநர் அல்லாத வேறோர் ஆளுக்கு ஒப்படைக்கப்படுவதற்கென அதனைக் கோருவதன்மூலம் அல்லது புறப்படும் விமான நிலையத்துக்கு அது திருப்பி அனுப்பப்பட வேண்டும் எனக் கோருவதன் மூலம் அதனைக் கையுதிர்க்கும் உரிமை அனுப்புநருக்குண்டு. அவர் இந்த உரிமையை அல்லது கையுதிர்ப்பை ஏற்றிச்செல்பவருக்கோ அல்லது வேறு அனுப்புநருக்கோ பங்கம் ஏற்படக்கூடியவாறான அத்தகைய முறையில் பிரயோகித்தல் ஆகாது என்பதுடன் இவ்வுரிமையைப் பிரயோகிப்பதன் மூலம் ஏற்படக்கூடிய எவையேனும் செலவுகளை அவர் மீளச் செலுத்துதல் வேண்டும்.

(2) அனுப்புநரின் தேவைக் கட்டளைகளை நிறைவேற்ற முடியாதிருப்பின் ஏற்றிச்செல்பவர் அவருக்கு அவ்விதம் உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

(3) அனுப்புநருக்கு ஒப்படைக்கப்பட்ட விமான வழிப்பட்டியலின் பாகம் முன்வைக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தாமலேயே சரக்கு கையுதிர்க்கப்படுவதற்கான கட்டளைக்கு ஏற்றிச்செல்பவர் கீழ்ப்படிவாராயின் அவர், அனுப்புநரிடமிருந்து மீட்டுப் பெறுவதற்கான அவரது உரிமைக்குப் பங்கமின்றி விமான வழிப்பட்டியலின் அப்பாகத்தை சட்டமுறையாக தமதுடைமையில் வைத்திருப்பவரான எவரேனும் ஆளுக்கு அதனால் ஏற்படக்கூடிய ஏதேனும் சேதத்திற்கு ஆளாவார்.

(4) அனுப்புநர் மீது சுமத்தப்பட்ட உரிமையானது 13 ஆம் உறுப்புரைக்கிணங்க ஒப்படைப் பெறுநரின் உரிமை ஆரம்பிக்கும்பொழுது இல்லாதொழிகின்றது. ஆனாலும் ஒப்படைப்பெறுநர் வழிப்பட்டியலையோ அல்லது சரக்கையோ ஏற்க மறுப்பாராயின் அல்லது அவருடன் தொடர்புகொள்ள முடியாதிருப்பின் கையுதிர்க்கும் உரிமையை அனுப்புநரே ஏற்கிறார்.

**உறுப்புரை 13**

(1) முற்போந்த உறுப்புரையில் தரப்பட்டுள்ள சூழ்நிலைகளிற் தவிர, சரக்கு சேரிடத்தை வந்தடைந்ததன்பேரில் விமான வழிப்பட்டியலைத் தம்மிடம் கைய ளிக்குமாறும் அத்துடன் வருமதியான அறவிடுகளின் கொடுப்பனவின்மீதும் விமான வழிப்பட்டியலில் தரப்பட்டுள்ள ஏற்றிச்செல்லல் பற்றிய நிபந்தனை களுக்கு இணங்கியொழுகுவதன் மீதும் சரக்கை தம்மிடம் ஒப்படைக்குமாறும் ஏற்றிச்செல்பவரைத் தேவைப்படுத்துவதற்கு ஒப்படைப்பெறுநர் உரித்துடைய வராவார்.

(2)வேறுவிதமாக உடன்பட்டுக்கொள்ளப்பட்டாலன்றி சரக்கு வந்தடைந்த வுடன் ஒப்படைப்பெறுநருக்கு அறிவித்தல் கொடுப்பது ஏற்றிச்செல்பவரின் கடமையாகும்.

(3) ஏற்றிச்செல்பவர் சரக்கு இறக்கப்பட்டமையை ஒப்புக்கொண்டால் அல் லது சரக்கு வந்துசேர்ந்திருக்கவேண்டிய தேதியையடுத்து ஏழு நாட்கள் முடிவடைவதன்பேரில் வந்துசேராவிடில் ஏற்றிச்செல்பவருக்கு எதிராக ஏற்றிச் செல்லல் பற்றிய ஒப்பந்தத்தினின்றெழும் உரிமைகளை வலுவுக்கிடுவதற்கு ஒப் படை பெறுநர் உரித்துடையவராவர்.

**உறுப்புரை 14**

அனுப்புநரும் ஒப்படைப்பெறுநரும், தாம் தமது சொந்த நலனுக்காகச் செயற்பட்டாலுஞ்சரி வேறொருவரின் நலனுக்காகச் செயற்பட்டாலுஞ்சரி முறையே தத்தமது சொந்தப் பெயரில் 12 ஆம் 13 ஆம் உறுப்புரைகளினால் தங்களுக்களிக்கப்பட்ட எல்லா உரிமைகளையும் வலுவுக்கிடலாம்.

**உறுப்புரை 15**

(1) அனுப்புநர் அல்லது ஒப்படைப்பெறுநர் ஒருவரொருவருடன் கொண் டுள்ள தொடர்பையோ அல்லது எந்த மூன்றாம் திறத்தவர்களின் உரிமைகள் அனுப்புநரிடமிருந்து அல்லது ஒப்படைப்பெறுநரிடமிருந்து பெறப்படுகின் றனவோ அந்த மூன்றாம் திறத்தவர்களின் பரஸ்பரத் தொடர்பையோ உறுப்பு ரைகள் 12, 13, 14 என்பன பாதிக்கப்படமாட்டா.

(2) உறுப்புரைகள் 12, 13, 14 என்பவற்றின் ஏற்பாடுகள் பட்டியலிலுள்ள வெளிப்படையான ஏற்பாட்டினால் மட்டுமே வேறுபடுத்தப்படலாம்.

(3) இச்சமவாயத்திலுள்ள எதுவும், கைமாற்றத்தகு விமான வழிப்பட்டிய லொன்று வழங்கப்படுவதைத் தடைசெய்யமாட்டாது.

**உறுப்புரை 16**

(1) ஒப்படைப் பெறுநருக்குச் சரக்கு ஒப்படைக்கப்படுவதற்கு முன்னர் அனுப்புநர், சுங்கப்பகுதியின் நகர் சுங்கப் பணிப்பாளரின் அல்லது பொலி சின் ஒழுங்குமுறைகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகின்றவாறான அத் தகைய தகவலைக் கொடுத்துதவ வேண்டும் என்பதுடன் விமான வழிப்பட்டி யலுடன் அத்தகைய ஆவணங்களை இணைத்தலும் வேண்டும். சேதம், ஏற் றிச் செல்பவரின் அல்லது அவரது சேவையாளர்களின் அல்லது முகவர்களின் தவறு காரணமாகவிருந்தாலன்றி அத்தகைய தகவல் அல்லது ஆவணம் இல் லாமையினால் போதாமையினால் அல்லது அதன் ஒழுங்கீனத்தினால் ஏற் பட்ட ஏதேனும் சேதத்திற்காக அனுப்புநரே ஏற்றிச் செல்பவருக்குப் பொறுப் பாதல் வேண்டும்.

(2) அத்தகைய தகவலின் அல்லது ஆவணங்களின் செம்மையையிட்டு அல் லது போதிய அளவினதா என்பதனையிட்டு விசாரிப்பதற்கு ஏற்றிச் செல்பவர் கடப்பாடுடையவர் அல்லர்.

## அத்தியாயம் III — ஏற்றிச் செல்பவரின் பொறுப்பு

**உறுப்புரை 17**

பிரயாணியொருவர் இறக்கின்றவிடத்து அல்லது காயமடைகின்றவிடத்து அல்லது பிரயாணியொருவருக்கு ஏற்படும் வேறு ஏதேனும் ஊறுகளுக்கு அவ்விதம் உண்டான சேதத்தை விளைவித்த விபத்து வானூர்தியில் இடம்பெற்றிருப்பின் அல்லது வானூர்தியில் ஏறுதல் அல்லது அதினின்று இறங்குதல் ஆகிய எவையேனும் செயற்பாட்டு நெறியின் போது இடம்பெற்றிருப்பின், அவ்விதம் உண்டான சேதத்திற்கு ஏற்றிச் செல்பவரே பொறுப்பாவார்.

**உறுப்புரை 18**

(1) பதிவு செய்யப்பட்ட பயணப் பொதியின் அல்லது ஏதேனும் சரக்கின் அழிவு அல்லது இழப்பு அல்லது அதற்கான சேதம் ஏற்படுமிடத்து அவ்விதம் உண்டான சேதத்தை விளைவித்த நிகழ்வு விமானம் மூலம் ஏற்றிச் செல்லும் பொழுது இடம்பெற்றிருப்பின் அவ்விதம் உண்டான சேதத்திற்கு ஏற்றிச் செல்பவரே பொறுப்பாவார்.

(2) முற்போந்த பந்தியின் கருத்தெல்லைக்குள் விமானம் மூலம் ஏற்றிச் செல்லல் ஆனது, விமான நிலையமொன்றிலாயினுஞ்சரி அல்லது வானூர்தியொன்றிலாயினுஞ்சரி அல்லது விமான நிலையத்திற்கு வெளியே தரையிறங்குகின்றவொரு விடயத்தில் எத்தன்மையதுமான ஏதேனுமிடத்து எந்தக் காலப் பகுதியின்போது பயணப்பொதி அல்லது சரக்கு ஏற்றிச் செல்பவரின் பொறுப்பிலிருக்கின்றதோ அந்தக் காலப் பகுதியைக் கொண்டிருக்கும்.

(3) விமான மூலம் ஏற்றிச் செல்லும் காலப்பகுதி விமான நிலையமொன்றுக்கு வெளியே மேற்கொள்ளப்படும் நிலத்திலான அல்லது கடலிலான அல்லது ஆற்றிலான ஏதேனும் ஏற்றிச் செல்லுதலை உள்ளடக்கமாட்டாது. ஆயினும், சரக்கை ஏற்றும் நோக்கத்திற்கு ஒப்படைக்கும் நோக்கத்திற்கு அல்லது ஒன்றிலிருந்து இன்னொன்றிற்கு மாற்றும் நோக்கத்திற்கு விமான மூலம் ஏற்றிச் செல்வதற்கான ஒப்பந்தமொன்றை நிறைவேற்றும் போது அத்தகைய ஏற்றிச் செல்லலொன்று இடம்பெறுமாயின் ஏதேனும் சேதம் விமானமூலம் ஏற்றிச் செல்லும்போது இடம்பெற்றவொரு விடயத்தின் விளைவேயாகும் என அதற்கு முரணான எண்பிப்பிற்கு அமைய ஊகிக்கப்படும்.

**உறுப்புரை 19**

பிரயாணிகளை, பயணப்பொதியை அல்லது சரக்கை விமானம் மூலம் ஏற்றிச் செல்வதிலான தாமதத்தினால் ஏற்பட்ட சேதத்திற்கு ஏற்றிச் செல்பவரே பொறுப்பாளியாவார்.

**உறுப்புரை 20**

ஏற்றிச் செல்பவர் தாமாகவும் தமது சேவையாளர்கள் மூலமாகவும் அல்லது முகவர்கள் மூலமாகவும் சேதத்தைத் தவிர்ப்பதற்கு அவசியமான எல்லா வழிமுறைகளும் எடுக்கப்பட்டுள்ளன என அல்லது தமக்கோ அல்லது அவர்களுக்கோ அத்தகைய வழிமுறைகளை எடுக்க முடியாதிருந்தது என எண்பிப்பாராயின் அவர் அச் சேதத்திற்குப் பொறுப்பாளியாகமாட்டார்.

**உறுப்புரை 21**

காணப்பட்ட ஆளின் கவனக்குறைவினாலேயே சேதம் விளைவிக்கப்பட்டது அல்லது சேதத்துக்கு ஏதுவாயிருந்தது என ஏற்றிச் செல்பவர் எண்பித்தால் நீதிமன்றமானது, அதன் சொந்த ஏற்பாடுகளுக்கிணங்க ஏற்றிச் செல்பவரை அவரது பொறுப்பிலிருந்து முற்றாகவோ அல்லது பகுதியளவிலோ விடுவிக்கலாம்.

**உறுப்புரை 22**

(1) ஆட்களை ஏற்றிச் செல்லுதலில் ஏற்றிச் செல்பவரின் பொறுப்பானது பிரயாணி ஒவ்வொருவருக்கும் இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் பிராங்க் பணத் தொகைக்கு மட்டுப்படுத்தப்படுகின்றது. வழக்கைக் கையாளும் நீதிமன்றத்தின் சட்டத்திற்கிணங்க தவணைக் கொடுப்பனவு என்ற வகையில் நட்டஈடு அளிக்கப்படலாம். சொல்லப்பட்ட கொடுப்பனவுகளின் சம்மதிப்புள்ள மூலதனப் பெறுமதி இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் பிராங்கை விஞ்சுதலாகாது. இருப்பினும், விசேட ஒப்பந்தத்தின் மூலம் ஏற்றிச் செல்பவரும் பிரயாணியும் அதில் கூடுதலான பொறுப்பின் வரையறையொன்றுக்கு உடன்படலாம்.

(2) – (அ) பதிவு செய்யப்பட்ட பயணப்பொதியையும் சரக்கையும் ஏற்றிச் செல்கையில் பொதி கையளிக்கப்பட்ட நேரத்தில் பிரயாணியோ அல்லது அனுப்புநரோ சேரிடத்திலே ஒப்படைப்பில் அக்கறை பற்றிய விசேட வெளிப்படுத்துகையொன்றைச் செய்து, விடயம் அவ்வாறு தேவைப்படுத்தினால் குறைநிரப்புத் தொகையொன்றையும் செலுத்தியிருந்தாலன்றி ஏற்றிச் செல்பவரின் பொறுப்பானது கிலோ கிராம் ஒன்றிற்கு இரு நூற்றி ஐம்பது பிராங் பணத்தொகையொன்றிற்கு மட்டுப்படுத்தப்படுகின்றது. அவ்விடயத்தில் பணத்தொகையானது சேரிடத்திலே ஒப்படைத்தலின்போது பிராயாணியின் அல்லது அனுப்புநரின் உள்ளவாறான அக்கறையைவிடப் பெரியது என அனுப்புநர் எண்பித்தாலன்றி ஏற்றிச் செல்பவர் வெளிப்படுத்தப்பட்ட தொகையை விஞ்சாதவொரு பணத் தொகையைச் செலுத்துவதற்காளாவார்

(ஆ) பதிவு செய்யப்பட்ட பயணப் பொதியின் அல்லது சரக்கின் பாகத்தினது அல்லது அதன்கண் அடங்கியுள்ள ஏதேனும் பொருளினது இழப்பின் சேதத்தின் அல்லது தாமதத்தின் விடயத்தில் ஏற்றிச் செல்பவரின் பொறுப்பு எந்தத் தொகைக்கு மட்டுப்படுத்தப்படுகின்றதோ அந்தத் தொகையைத் தீர்மானிக்கையில் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய தொகையானது சம்பந்தப்பட்ட பொதியின் அல்லது பொதிகளின் எடையாக மட்டுமே இருத்தல் வேண்டும். இருப்பினும் பதிவு செய்யப்பட்ட பயணப் பொதியின் அல்லது சரக்கின் பாகத்தினது அல்லது அதன் கண் அடங்கியுள்ள பொருளொன்றின் இழப்பு சேதம் அல்லது தாமதம் அதே பயணப் பொதித் தனிக்கைக்கு அல்லது அதே விமான வழிப் பட்டியலுக்கு உட்பட்ட வேறு பொதிகளின் பெறுமதியைப் பாதிக்குமிடத்து பொறுப்பின் வரையறையைத் தீர்மானிக்கையில் அத்தகைய பொதியின் அல்லது பொதிகளின் மொத்த எடையும் கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்.

(3) எந்தப் பொருட்களைப் பிரயாணி தாமே பொறுப்பேற்கின்றாரோ அந்தப் பொருட்களைப் பொறுததளவில் ஏற்றிச் செல்பவரின் பொறுப்பானது பிரயாணியொருவருக்கு ஐயாயிரம் பிராங்கிற்கு மட்டுப்படுத்தப்படுகின்றது.

(4) இந்த உறுப்புரையில் விதித்துரைக்கப்பட்ட மட்டுப்பாடுகள், நீதிமன்றம் அதன் சொந்த சட்டத்திற்கிணங்க மேலதிகமாக நீதிமன்றச் செலவுகள் மற்றும் வழக்காளியால் கூறப்பட்ட வேறு வழக்காடற் செலவுகள் முழுவதையும் அல்லது அவற்றின் பாகத்தை கணிப்பதினின்று நீதிமன்றத்தைத் தடைசெய்தலாகாது. நீதிமன்றச் செலவுகளும் வழக்காடலில் வேறு செலவுகளும் புறநீங்கலாக கணிக்கப்பட்ட நட்டஈட்டின் தொகையானது. சேதத்தை விளைவித்த நிகழ்வின் தேதியிலிருந்து ஆறு மாதங்களைக் கொண்டவொரு காலப் பகுதிக்குள் அல்லது இவ்வழக்கு தொடங்குவதற்கு முன்னால் அது பிந்தி நிகழ்வதாயின் ஏற்றிச் செல்பவர் வழக்காளிக்கு எழுத்தில் விருப்பறிவிப்புச் செய்துள்ள பணத்தொகையை விஞ்சவில்லையெனின் முற்போந்த ஏற்பாடு ஏற்புடையதாகாமாட்டாது

(5) இந்த உறுப்புரையில் பிராங்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள பணத் தொகைகள் ஆயிரத்தில் தொளாயிரம் பங்கு சுத்தமான அறுபத்தைந்தரை மில்லிகிராம் தங்கத்தைக் கொண்டுள்ள ஒரு நாணய அலகைக் குறிப்பீடு செய்வதாகக் கருதப்படுதல் வேண்டும். இப்பணத்தொகைகள் முழுத்தானங்களில் தேசிய நாணயங்களாக மாற்றப்படலாம். பணத்தொகைகள், தங்கம், அல்லாத வேறு தேசிய நாணயங்களாக மாற்றுதலானது, நீதித்துறை நடவடிக்கைகளின் விடயத்தில் தீர்ப்பின் தேதியன்று அத்தகைய நாணயங்களின் தங்கப் பெறுமதிக்கிணங்கச் செய்யப்படுதல் வேண்டும்

**உறுப்புரை 23**

(1) ஏற்றிச் செல்பவரின் பொறுப்பை விடுவிக்க அல்லது இச்சமவாயத்தில் விதிக்கப்பட்டதைவிடக் குறைவானவொரு வரையறையை நிர்ணயிக்க விழையும் ஏதேனும் ஏற்பாடு வெற்றும் வறிதும் ஆதல் வேண்டும். ஆனால் அத்தகைய ஏதேனும் ஏற்பாடு வறிதாதலானது, முழு ஒப்பந்தம் வறிதாதலை ஈடுபடுத்தமாட்டாது. முழு ஒப்பந்தம் இச்சமவாயத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

(2) இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியானது, ஏற்றிச் செல்லப்படும் சரக்கின் உள்ளார்ந்த பழுது, தரம் அல்லது குறைபாடு என்பவற்றிலின்றெழும் இழப்பை அல்லது சேதத்தை மேவுகின்ற ஏற்பாடுகளுக்கு ஏற்புடையதாக மாட்டாது.

**உறுப்புரை 24**

(1) பதினெட்டாம் 19 ஆம் உறுப்புரைகளினால் மேவப்படும் விடயங்களில் நட்டஈட்டிற்கான ஏதேனும் வழக்கு எப்படி தாபிக்கப்படினும் இச்சமவாயத்தில் தரப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் வரையறைகளுக்கும் அமையவே கொணரப்படலாம்.

(2) பதினேழாம் உறுப்புரையால் மேவப்பட்ட விடயங்களில், வழக்குத் தொடுப்பதற்கு உரிமையுடைய ஆட்கள் யார், முறையே அவர்களது உரிமைகள் என்னென்ன என்ற கேள்விகளுக்குப் பங்கமின்றி முற்போந்த பந்திகளின் ஏற்பாடுகளும் ஏற்புடையனவாகும்.

**உறுப்புரை 25**

ஏற்றிச் செல்பவரால் அவரது சேவையாளர்களால் அல்லது முகவர்களால் சேதம் விளைவிக்கும் எண்ணத்துடன் அல்லது கவனமில்லாமலும் சேதம் விளையக்கூடும் என்ற அறிவுடனும் செய்யப்பட்ட ஒரு செயலினின்று அல்லது விட்டுவிடுகையினின்று சேதம் விளைந்ததென்று எண்பிக்கப்பட்டால், 22 ஆம் உறுப்புரையில் குறித்துரைக்கப்பட்டபொறுப்பின் வரையறை ஏற்புடையதாதல் ஆகாது; ஆயினும் ஒரு சேவையாளரின் அல்லது முகவரின் அத்தகைய செயலின் அல்லது விட்டுவிடுகையின் விடயத்தில் அவர் அவரது தொழிலின் நோக்கெல்லைக்குட்பட்டே செயற்பட்டிருக்கிறார் எனவும் எண்பிக்கப்படுகின்றது.

**உறுப்புரை 25அ**

(1) இச்சமவாயம் தொடர்புறுத்தும் சேதத்தினின்று ஒரு சேவையாளருக்கு அல்லது முகவருக்கு அல்லது ஏற்றிச் செல்பவருக்கு எதிராக சேவையாளர் அல்லது முகவர் அவரது தொழிலின் நோக்கெல்லைக்குள்ளேயே செயலாற்றினாரென எண்பிப்பாராயின் அவர், 22 ஆம் உறுப்புரையின்கீழ் எந்தப் பொறுப்பில் வரையறைகளைக் கோருவதற்கு ஏற்றிச் செல்பவர் உரித்துடையவராகின்றாரோ அந்தப் பொறுப்பின் வரையறைகளைக் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்வதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(2) அந்த விடயத்தில், ஏற்றிச் செல்பவரிடமிருந்து அவரது சேவையாளர்களிடமிருந்து அல்லது முகவர்களிடமிருந்து அறவிடப்படற்பாலதான தொகைகளின் கூட்டுமொத்தம் சொல்லப்பட்ட வரையறைகளை விஞ்சுதலாகாது.

(3) சேதம் விளைவிக்கும் எண்ணத்துடன் அல்லது கவனமில்லாமலும் சேதம் விளையக்கூடும் என்ற அறிவுடனும் சேவையாளரின் அல்லது முகவரின் செயலொன்றினின்று அல்லது விட்டுவிடுகையின்றே சேதம் விளைந்ததென எண்பிக்கப்படின் இவ்வுறுப்புரையின் (1) ஆம் (2) ஆம் பந்திகளின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் ஆகாது.

**உறுப்புரை 26**

(1) பயணப்பொதியை அல்லது சரக்கை ஒப்படைக்கப்பெறுவதற்கு உரித்துடைய ஆளினால் முறைப்பாடின்றி ஏற்றுக்கொள்ளல், அது நல்ல நிலையிலும் ஏற்றிச்செல்லல் ஆவணத்திற்கிணங்கவும் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதற்கு முதற்தோற்றச் சான்றாகும்.

(2) சேதத்தின் விடயத்தில் ஒப்படைக்கப்பெறுவதற்கு உரித்துடைய ஆள், சேதம் கண்டுபிடிக்கப்பட்டபின்னர் உடனடியாகவும் அத்துடன் பயணப் பொதியின் விடயத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட தேதியிலிருந்து குறைந்தது ஏழு நாட்களுக்குள்ளும் சரக்கின் விடயத்தில், பெற்றுக்கொள்ளப்பட்ட தேதியிலிருந்து பதினாலு நாட்களுக்குள்ளும் ஏற்றிச் செல்பவருக்கு முறையிடுதல் வேண்டும். தாமதத்தின் விடயத்தின் பயணப்பொதி அல்லது சரக்கு அவருக்குக் கையளிக்கப்பட்ட தேதியிலிருந்து ஆகக்குறைந்தது இருபத்தொரு நாட்களுக்குள்ளேயாவது முறைப்பாடு செய்யப்படுதல் வேண்டும்.

(3) முறைப்பாடு ஒவ்வொன்றும் ஏற்றிச் செல்லல் பற்றிய ஆவணத்தின்மீது எழுத்தில் அல்லது மேலே சொல்லப்பட்ட நேரங்களுக்குள் அனுப்பிவைக்கப்படும் எழுத்தினாலான புறம்பான அறிவித்தல்மீது செய்யப்பட வேண்டும்.

(4) மேலே சொல்லப்படும் நேரங்களுக்குள் முறைப்பாடு செய்யத் தவறுமிடத்து ஏற்றிச் செல்பவரின் மோசடியின் விடயத்தைத் தவிர அவருக்கெதிராக வழக்கெதுவும் இருத்தல் ஆகாது.

**உறுப்புரை 27**

பொறுப்புடைய ஆள் இறக்கின்ற விடயத்தில் இச்சமவாயத்தின் நியதிகளுக்கிணங்க அவரது மரணம் சொத்துக்களுக்கு சட்டமுறையாக பிரதிநிதித்துவமளிப்பவர்களுக்கு எதிராக நட்டஈட்டுக்கான வழக்கு இருத்தல் வேண்டும்.

**உறுப்புரை 28**

(1) நட்டஈட்டிற்கான வழக்கொன்று வழக்காளியின் விருப்பத்தின்பேரில் உயர் ஒப்பந்தம் செய்துகொள்ளும் திறத்தவர்களுள் ஒரு திறத்தவரின் ஆள்புலத்தில் ஏற்றிச் செல்பவர் சாதாரணமாக வதிகின்ற இடத்தில் அல்லது அவரது பிரதான தொழிலிடத்தைக் கொண்டுள்ள இடத்தில் அல்லது எந்தத் தாபனத்தினால் ஒப்பந்தம், இடத்திலுள்ள நியாயாதிக்கமுடைய நீதிமன்றத்தின் முன்னிலையில் அல்லது சேரிடத்திலுள்ள நியாயாதிக்கமுடைய நீதிமன்றத்தின் முன்னிலையில் தொடரப்படுதல் வேண்டும்.

(2) நடவடிக்கைமுறை பற்றிய கேள்விகள் வழக்கைக் கையாளும் நீதிமன்றத்தின் சட்டத்தின் சட்டக் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.

**உறுப்புரை 29**

(1) சேரிடத்தை வந்தடைந்த தேதியிலிருந்து அல்லது வானூர்தி வந்தடைந்திருக்க வேண்டிய தேதியிலிருந்து அல்லது ஏற்றிச் செல்லல் நிறுத்தப்பட்ட தேதியிலிருந்து கணிக்கப்பட்ட இரண்டு ஆண்டுகளுக்குள் வழக்கொன்று தொடரப்படாவிடில் நட்டஈட்டிற்கான உரிமை இல்லாதொழிந்துவிடும்.

(2) வரையறைக்காலப் பகுதியைக் கணிக்கும் முறையானது வழக்கைக் கையாளும் நீதிமன்றத்தின் சட்டத்தினால் தீர்மானிக்கப்படும்.

உறுப்புரை 30

(1) அடுத்துறும் பல்வேறு ஏற்றிச் செல்பவர்களால் புரியப்படவுள்ளதும் 1ஆம் உறுப்புரையின் மூன்றாம் பந்தியில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணத்துக் குட்பட்டதுமான ஏற்றிச் செல்பவரின் விடயத்தில் பிரயாணிகளை, பயணப் பொதியை அல்லது சரக்கை ஏற்றிக்கொள்கின்றவரான ஏற்றிச் செல்பவர் ஒவ்வொருவரும், இச்சமவாயத்தில் தரப்பட்டுள்ள விதிகளுக்கு அமைந்தோ ராதல் வேண்டும் என்பதுடன் அவரது மேற்பார்வையின்கீழ் புரியப்படும் ஏற்றிச் செல்பவரின் அந்தப் பாகத்தினால் ஒப்பந்தம் கையாளப்படுகின்ற அள வுக்கு ஏற்றிச்செல்லும் ஒப்பந்தத்திற்கு ஒப்பந்தம் செய்துகொள்ளும் திறத் தவர்களுள் ஒரு திறத்தவராகக் கருதப்படுவர்.

(2) இந்த இயல்பினதான ஏற்றிச் செல்பவரின் விடயத்தில், முதலாவதாக ஏற்றிச் செல்பவர் வெளிப்படையான உடன்பாட்டின் மூலம் முழுப் பிரயாணத் திற்கும் பொறுப்பேற்றுள்ள விடயத்திற்தவிர எந்த ஏற்றிச் செல்பவரின்போது விபத்து அல்லது தாமதம் ஏற்பட்டதோ அந்த ஏற்றிச் செல்லலைப் புரிந்த ஏற்றிச் செல்பவருக்கெதிராக மட்டுமே பிரயாணியோ அல்லது அவரது பிரதி நிதியோ நடவடிக்கை எடுக்கலாம்.

(3) பயணப்பொதி அல்லது சரக்கு தொடர்பில் பிரயாணி அல்லது அனுப்புநர், முதலாவது ஏற்றிச் செல்பவருக்கெதிராக வழக்குத்தொடரும் உரிமையைக் கொண்டிருப்பார்; அத்துடன் ஒப்படைக்கப்பெறுவதற்கு உரித் துடையவரான பிரயாணி அல்லது ஒப்பனைப்பெறுநர் கடைசியாக ஏற்றிச் செல்பவருக்கெதிராக வழக்குத் தொடரும் உரிமையைக் கொண்டிருப்பார்; அத்துடன் மேலும், எந்த ஏற்றிச் செல்லலின்போது அழிவு, இழப்பு, சேதம் அல்லது தாமதம் இடம்பெற்றதோ, அந்த ஏற்றிச் செல்லலைப் புரிந்த ஏற்றிச் செல்பவருக்கெதிராக ஒவ்வொருவரும் நடவடிக்கை எடுக்கலாம். ஏற்றிச் செல்பவர்களான இவர்கள் பிரயாணிக்கு அல்லது அனுப்புநருக்கு அல்லது ஒப்படைப்பெறுநருக்கு கூட்டாகவும் தனித்தனியாகவும் பொறுப்புடையவரா வார்.

## அத்தியாயம் IV — இணைந்த ஏற்றிச்செல்லல் தொடர்பான ஏற்பாடுகள்

உறுப்புரை 31

(1) பகுதியளவில் வான் மூலமாகவும் பகுதியளவில் வேறுவகையான ஏதேனும் ஏற்றிச் செல்லல் மூலமும் புரியப்பட்டதான இணைந்த ஏற்றிச் செல்லலின் விடயத்தில், இச்சமவாயத்தின் ஏற்பாடுகள் வான் மூலம் ஏற்றிச் செல்லலுக்கு மட்டுமே ஏற்புடையனவாகும்; ஆயின் வான் மூலம் ஏற்றிச் செல்லலானது 1 ஆம் உறுப்புரையின் நியதிகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.

(2) இச்சமவாயத்திலுள்ள எதுவும் இணைந்த ஏற்றிச் செல்லலின் விடயத் தில், வான் மூலம் ஏற்றிச் செல்லல் பற்றிய ஆவணத்தில் விதமான ஏற்றிச் செல்லல் தொடர்பான நிபந்தனைகளை உட்புகுத்துவதிலிருந்து திறத்தவர் களைத் தடைசெய்தலாகாது. ஆயினும் இச்சமவாயத்தின் ஏற்பாடுகள் வான் மூலம் ஏற்றிச் செல்லலைப்போன்று அனுசரிக்கப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் V — பொதுவானவையும் இறுதியானவுமான ஏற்பாடுகள்

உறுப்புரை 32

ஒப்பந்தத்தில் அடங்கியுள்ள ஏதேனும் வாசகமும் எந்தச் சேதத்தினால் திறத்தவர்கள் இச்சமவாயத்தால் விதித்துக்கூறப்பட்ட விதிகளை மீறுவதாகக் கருதப்படுகின்றனரோ அந்தச் சேதம் ஏற்படுவதற்கு முன்னர் செய்துகொள் ளப்பட்ட எல்லா விசேட உடன்படிக்கைகளும், ஏற்புடையதாக்கப்படவுள்ள சட்டத்தைத் தீர்மானிப்பதன் மூலமாகவாயினுஞ்சரி, அல்லது நியாயாதிக்கம் தொடர்பான விதிகளைத் திருத்துவதன் மூலமாகவாயினுஞ்சரி வெற்றும்

வலிதுமாக்கப்படுதல் வேண்டும். இருப்பினும் 28ஆம் உறுப்புரையின் முதலாம் பந்தியில் குறிப்பிடு செய்யப்பட்ட நியாயாதிக்கங்களுள் ஒரு நியாயாதிக்கத்தினுள் நடுத்தீர்ப்பு இடம்பெறவிருப்பின் சரக்கை ஏற்றிச் செல்வதற்கு இச்சமவாயத்திற்கமைய நடுத்தீர்ப்பு வாசகங்கள் அனுமதிக்கப்படும்.

### உறுப்புரை 33

இச்சமவாயத்தில் அடங்கியுள்ள எதுவும் ஏற்றிச் செல்லல் பற்றிய ஏதேனும் ஒப்பந்தம் செய்துகொள்ள மறுப்பதினின்றாயினுஞ்சரி அல்லது இச்சமவாயத்தின் ஏற்பாடுகளுடன் முரண்படாத ஒழுங்குவிதிகளை ஆக்குவதினின்றாயினுஞ்சரி ஏற்றிச் செல்பவரைத் தடைசெய்தலாகாது.

### உறுப்புரை 34

வான் மூலம் ஏற்றிச் செல்பவர் ஒருவரின் தொழிலின் வழமையான நோக்கெல்லைக்கு வெளியே அசாதாரணமான சூழ்நிலைகளில் புரியப்படும் ஏற்றிச் செல்லலின் விடயத்தில் ஏற்றிச் செல்லல் பற்றிய ஆவணங்கள் தொடர்பாக 3 முதல் 9 வரையிலான உறுப்புரைகளின் (இவையிரண்டும் உட்பட) ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் ஆகாது.

### உறுப்புரை 35

"நாட்கள்" என்னும் சொல்லமைப்பு இச்சமவாயத்தில் பயன்படுத்தப்படும்போது வேலை நாட்கள் என்றல்லாமல் நடப்பு நாட்கள் என்று பொருள்படும்.